REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 மே 10 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

89 1932 - 2021

வரு. 89 இல. 109 | May 10,Monday, 2021 | 24 பக்கங்கள் | 30/-

அரசின் பங்காளி கட்சிகளின்

## தலைவர்களை நாளை சந்திக்கிறார் பிரதமர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கும் விசேட கூட்டமொன்று பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷவின் தலைமையில் நாளைய தினம் நடைபெறவுள்ளது.

06

கொரோனா பரவலை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை

# நூற்றுக்கும் மேற்பட்ட GS பிரிவுகள் முடக்கம்



அரசாங்கம் மக்களைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருவதாக இராணுவத்தளபதி தெரிவிப்பு

ஒரு வாரத்தில் ஏற்பட்ட 100 மரணங்களுக்கு மக்களது கவனயீனமே காரணம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தல் நடவடிக் கைகளுக்காக நேற்று வரை நூற்றுக்கும் மேற்பட்ட கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தலுக் காக முடக்கப்பட்டுள்ளன. நேற்றும் 21 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலுக்காக

06



புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய இரசாயன பதார்த்தம் கலக்கப்பட்டு இறக்குமதிசெய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் மீண்டும் அந்த நாட்டுக்கே திருப்பி அனுப்பப்பட்டன. 230 மெற்றிக்தொன் அடங்கிய தேங்காய் எண்ணெய் 12 கொள்கலன்களும் துறைமுகத்தில் கப்பலுக்கு ஏற்றப்பட்டபோது.

நாடளாவிய ரீதியில் கொரோனாவை கட்டுப்படுத்த

## 09 மாகாணங்களுக்கும் புதிதாக பிரதி சுகாதார பணிப்பாளர்கள்

நியமிக்கவுள்ளதாக அமைச்சர் பவித்ரா தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிக ரித்துச் செல்லும் நிலையில், மாகாண மட்டத்தில் அதனை கட் டுப்படுத்தும் நோக்கில் விசேட வேலைத்திட்டங்கள் நடை முறைப் படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க ஒன்பது மாகாணங்களுக்கு 9 பிரதி சுகாதார

06

இந்திய திரிபு கொரோனா நோயாளி மூலம்

## சமூகத் தொற்று பரவும் ஆபத்துக்கு வாய்ப்பில்லை

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்திய தி ரிபுபடுத்தப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று நோயாளியான நபரினால் சமூ கத்தில் அந்த வைரஸ் தொற்று பரவும் ஆபத்து கிடையாது என இராஜாங்க

06

யாழ். மாநகர சபையின் செயற்பாடுகள்;

## அரசின் செயற்பாடுகளுக்கு முதல்வர் மணி கண்டனம்



ஊழியர்களை TIDக்கு அழைத்தமை தவறாம்

யாழ்.மாநகர சபையின் சாதாரண செயற் பாடுகளைக் கூட பயங்கரவாத செயற்பா டுகளாக அரசு சித்தரிக்கின்றது என யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன் ஒரு அங்கமாகவே யாழ். மாநகர சபையின் தண்டம் அறவிடும் பணியாளர்கள் பயங்கரவாத

06

## மக்கள் காங்கிரஸ் பதில் தலைவராக சஹீட் நியமனம்



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பதில் தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி என்.எம். சஹீட் நிய மிக்கப்பட்டுள்ளார். கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீன் கைது செய் யப்பட்டு தடுப்புக் காவலில்

06

## 40 புதிய கட்சிகள் பதிவு செய்வதற்கு விண்ணப்பம்



40 புதிய அரசியல் கட்சிகள் பதிவுக்காக விண்ணப்பித்திருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு வின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரி வித்துள்ளார்.

இவற்றில் 18

06

ஒரு மாதமாவது கட்டுப்பாடுகள் அவசியம்

## நாட்டில் வேகமாகப் பரவும் திரிபடைந்த கொவிட் வைரஸ்

அநாவசிய பயணங்களை தவிர்க்குமாறு வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கையில் திரிபடைந்த வீரியமிக்க கொவிட் வைரஸ் பரவுவதனால் குறைந்தபட்சம் ஒரு மாத காலம் அத்தியாவசிய பயணங்களை தவிர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முடிந்தளவு வீட்டில் இருந்து நேரத்தை செலவிடுமாறு, கொவிட் வைரஸ் திரிபு தொடர் பில் ஆய்வு நடத்தும் ஸ்ரீ ஜயவர்தனபுர

06

## ஸ்வர்ணமஹால் வைப்பாளருக்கு இன்று முதல் நஷ்டஈடு வழங்கல்

மக்கள் வங்கி கிளைகளில் பெற ஏற்பாடு –மத்திய வங்கி அறிவிப்பு

ஸ்வர்ணமஹால் பினான் ஸியல் சேர்விசர்ஸ் பி.எல்.சி நிறுவனம் தகைமையுடைய வைப்பாளருக்கும் சட்டரீதி யான பயன்பெறுநர்களுக்கும் இன்று (10) முதல் இழப் பீட்டுத்தொகையை வழங்க வுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, உரிய வைப் புக்களின் தகைமையுடைய வைப்பாளர்கள், தொடர்பு டைய சட்டரீதியான பயன்பெறுநர்கள்

06

கொவிட் பரவலில் ஆசியாவில்

## இரண்டாம் இடத்தை பிடித்துள்ள இலங்கை



இலங்கை யில் கொவிட் பரவல் வேகம் கடந்த ஒரு வார காலப்பகுதியில் 82 வீதமாக பதி வாகியுள்ளதாக சர்வதேச ஆய்வு சுட்டிக்காட் டியுள்ளது.

06

ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 09– 14 |
| --- | --- |
| ஸஹர் | 04–20 |
| சுபஹ் | 04–35 |
| சூ.உதயம் | 05–55 |
| லுஹர் | 12–08 |
| அஸர் | 03–28 |
| மஃரிப் | 06–20 |
| இஷா | 07–33 |

Halo
Complete Family Protection
Hotline: 077 4648855



முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள்; பிரதமருடன் பிரத்தியேக சந்திப்பு

அவ்வேளையிலேயே பிரதமர் இப்தாருக்கு ஏற்பாடு –முஷாரப் எம்.பி

03



ரூபா நோட்டுகளுக்கு பதிலாக சட்டவிரோத

அமெரிக்க டொலர்களை அச்சிடும் தகவல்கள் கசிவு

அவதானமாக இருக்குமாறு அஜித் ரோஹண கோரிக்கை

03



கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம்;

கணக்காளரைக்கூட நியமிக்க முடியாதிருந்த நல்லாட்சி அரசு

தனது இருப்பை தக்கவைக்க TNAயும் நாடக மாடியது

03

இலங்கைக்குள் அத்துமீறி நுழைந்த

## தமிழக மீனவர்களின் ரீ. சேர்ட்டில் பிரபாகரன்

கடற்படை விசாரணை ஆரம்பம்



இலங்கை கடற்பரப்பினுள் சட்டவிரோத மாக ஊடுருவி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்கள் சிலர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் படம் பொறிக்கப் பட்ட 'ரி சேர்ட்' அணிந்திருந்தமை தொடர் பில் கடற்படையினர் விசாரணைகளை முன் னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக் கடற்பரப்பினுள் கடந்த வியா ழக்கிழமை தமிழக மீனவர்கள் சட்டவிரோ தமாக நுழைந்து மீன் பிடியில் ஈடு பட்டிருந்தனர்.

06

சூட்சுமமாக ஷாம்பு போத்தல்களில் மறைத்து

## 60 மில்லியன் ரூபா கொக்கேய்ன் கடத்திய தென்னாபிரிக்க பிரஜை

விமான நிலையத்தில் சுங்கப்பிரிவினரிடம் சிக்கினார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



60 மில்லியன் ரூபா பெறுமதியான கொக்கேய்ன் போதைப்பொருளு டன் தென்னாபிரிக்க பிரஜையொரு வர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

59 வயதான தென்னாபி ரிக்க பிரஜை கொக்கேய்ன்

06

விக்கல் வீராச்சாமி



**கமல்:** நாட்டு நடப்பு தெரியாம கட்சியை ஆரம்பிச்சுட்டு அதை இப்ப கலைக்–கிறதுக்கு நான் படுகிற பாடு இருக்கே அப்பப்பா...

**ரஜனி:** நீங்க பரவாயில்ல தம்பி, நான் கட்சிய ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடியே கலைக்கப் பட்ட பாடு இருக்கே நினைக்–கவே பயமா இருக்கு...!!!

இலங்கையில் அதிக நன்மைகளைக் கொண்ட Couple பிளான்
Couple BLASTER
ஒருவர் செயற்படுத்திக்கொண்டால் அவருக்கும், உங்களுக்கும்
UNLIMITED CALLS மற்றும் SMS
மாதம் முழுவதும் ரூ.123
வரி உள்ளடங்களாக
முற்கொடுப்பனவு இணைப்பினை செயற்படுத்த ரூ.123 ஐ ரீலோட் செய்யுங்கள்.
பிற்கொடுப்பனவு இணைப்பிற்காக #171# ஐ டயல் செய்யுங்கள்.
அவரது இலக்கத்தைப் பதிவு செய்திட #171# ஐ டயல் செய்யுங்கள்.
TRC/D/PRO/20/08 • நிபந்தனைகளுக்கு உட்பட்டது
Dialog
எதிர்காலம் இன்றே.



# பரீட்சை பெறுபேறுகளை அதிகரிக்க அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்

## அதிபர், ஆசிரியர்களிடம் பிரதமர் மஹிந்த வேண்டுகோள்





சிறந்த பெறுபேறுகளை பெறும் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்க்கும் நிலை காணப்படுவதால் நாட்டின் அனைத்து பாடசாலைகளது ஆசிரியர்களும் அதிபர்களும் தமது பாடசாலையின் பரீட்சை பெறுபேறுகளை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டுசெல்ல அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் வைத்து தெரிவித்தார்.

பிரபல பாடசாலைகளுக்கு செல்வது என்பது தற்போதைய மாணவர்களின் நோக்கமல்ல எனவும், சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தும் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்ப்பதிலேயே பெற்றோர் ஆர்வம் கொண்டுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இவ்வாண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தொழில்நுட்ப பிரிவில் அதிக மதிப்பெண்களை பெற்ற ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியின் மாணவர்களான நவினி ரவிஷ்கா மற்றும் பானுக விக்ரமசிங்க ஆகிய இருவரும் அலரி மாளிகைக்கு வருகை தந்து தங்களது பெறுபேறுகளை அறிவித்தபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நவினி ரவிஷ்கா மாணவி உயிரியல் தொழில்நுட்ப பிரிவில் அகில இலங்கை ரீதியில் இரண்டாவது இடத்தையும், பானுக விக்ரமசிங்க மாணவன் பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் அகில இலங்கை ரீதியில் நான்காவது இடத்தையும் பிடித்துள்ளார்.

தொழில்நுட்ப துறைக்கான சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியின் தொழில்நுட்ப பிரிவில் கல்வி கற்பதற்காக அநுராதபுரம், கிளிநொச்சி, நிகவெரடிய மற்றும் இரத்தினபுரி ஆகிய நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து மாத்திரமன்றி பிரபல பாடசாலைகளிலிருந்தும் மாணவர்கள் வருகை தருவதாக அதிபர் திரு.எம்.ஆர்.டீ.கசுன் குணரத்ன இதன்போது தெரிவித்தார்.

தொழில்நுட்ப பிரிவில் கல்வி கற்பிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட தெற்காசியாவின் முதலாவது பாடசாலை ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியாகும். அங்கு 6800 மாணவர்கள் கல்வி கற்பதுடன் 315 ஆசிரியர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த சந்தர்ப்பத்தில் அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் மாணவர்களின் பெற்றோர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கொரோனாவிலிருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாக்க சகல மதத்தலங்களிலும் விசேட பிரார்த்தனைகள்







புத்தசாசன, மத, மற்றும் கலாசார விவகார அமைச்சின் ஏற்பாட்டில் பம்பலப்பிட்டி கதிரேசன் ஆலயத்தில் கொரோனா கோவிட்19 நாட்டை விட்டு நீங்க வேண்டும் என்பதற்கான முர்த்திஞ்ச ஹோம பூஜை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ நாகராஜ குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில்ப பிரதமரின் இந்து மத இணைப்பாளர் பிரம்மஸ்ரீ பாபு சர்மா, இந்த சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் மற்றும் ஓய்வுபெற்ற நீதிபதி ஸ்ரீபவன், ஆலய தர்மகர்த்தா இராஜேந்திரன் செட்டியார் மற்றும் கலந்து கொண்டோரையும் காணலாம். (படம் :கொழும்பு வடக்கு நிருபர்)



கங்காராமை விகாரையில் நடைபெற்ற மதஅனுஷ்டானத்தின் போது. (படம்: சுதத் மலவீர)



கொரோனா அபாயம் நீங்கவேண்டி யாழ். கீரிமலை நகுலேஸ்வரம் மற்றும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் ஆகியவற்றில் சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டுள்ளது. குறித்த வழிபாடுகளில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர். வழிபாடுகளின் நிறைவில் இந்திய மக்களைப் பிராத்தித்து அந்த நாட்டுப் பிரதமருக்கான கடிதங்கள் இந்தியத் துணைத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது.



கோவிட் 19 தொற்றுநோயிலிருந்துளநாட்டையும் மக்களையும் பாதுகாக்க கோரும் விஷேட பிரார்த்தனை கொள்ளுபிட்டி ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்றது. பிரதமரின் முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார விவகார ஒருங்கிணைப்பாளர் ஸெய்யித் ஹசன் மௌலானா பிரார்த்தனை நடத்துவதையும் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முசம்மில், புத்தசாசன அமைச்சின் சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் ஒருங்கிணைப்பு செயலாளர் பர்சான் மன்சூர், முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார திணைகள பணிப்பாளர் எ. பி. எம். அஷ்ரப், கொள்ளுபிட்டி ஜும்மா பள்ளிவாசல் பிரதி தலைவர் முஸ்லீம் சலாஹுதீன் மற்றும் உலமாக்களை படத்தில் காணலாம். படம் :ருஸைக் பாரூக்





இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நடைபெற்ற மத அனுஷ்மானங்களில் போது. (படம்: சுதத் மலவீர)



தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் கொரோனாவில் இருந்து நாடு விடுபட மிருத்யுஞ்சய ஹோமம் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேவஸ்தான குருக்கள் லங்கா தேசமானி, முத்துசாமி ஐயர், பிரசாந்த் சர்மா, ஆலய தேசிகர் விஜயகாந்த், கோயில் பரிபாலன சபையின் பொருளாளர் ரொசான் ராஜசேகர், செயலாளர் விஜேந்திரன், தலைவர் பத்மா ஆகியோர் கலந்துக்கொண்டனர். தலவாக்கலை குறூப் நிருபர்

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2021 மே 10 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

**தொழுகை நேரம்**
09முதல் 14 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.35 |
| லுஹர் | 12.08 |
| அஸர் | 03.28 |
| மஃரிப் | 06.20 |
| இஷா | 07.33 |

**இன்றைய சுபதினம்**
பிலவ வருடம் சித்திரை 27
ராகுகாலம் : காலை : 07.30 - 9.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 7.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சதுர்த்தசி



**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | தனம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | கோபம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | பொறுமை |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | மறதி |
| மகரம் | சுகம் |
| கும்பம் | வெற்றி |
| மீனம் | செலவு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# 1,04,463 தொற்று நோயாளிகள் பூரணமாக குணமடைந்துள்ளனர்

## கொழும்பு மாவட்டத்திலேயே அதிக வைரஸ் தொற்று நோயாளர்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு ள்ளாகி குணமடைந்துள்ளவர்களின் எண்ணிக்கை 1,04.463 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதே வேளை நேற்றைய தினம் மேலும் 1,732பேர் புதிதாக இனங்காணப்பட்டுள்ள நிலையில் நேற்று வரை 1,24,966 கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் ஆயிரத்து 365 பேர் நேற்றைய தினம் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாகவும் மேலும் 19 ஆயிரத்து 350 பேர் பல்வேறு வைத்தியசாலைகளிலும் மருத்துவ கண்காணிப்பு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் நேற்று முன்தினம் மேலும் 1896 கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் புதிதாக இனம் காணப்பட்டுள்ள நிலையில் மேல் மாகாணத்தில் மாத்திரம் 1,116 வைரஸ் தொற்று நோயாளிகள் புதிதாக இனங்காணப்பட்டுள்ளதாக கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. அதற்கிணங்க கொழும்பு மாவட்டத்தில் 411 பேரும் களுத்துறை மாவட்டத்தில் 358 பேரும் கம்பகா மாவட்டத்தில் 347 பேரும் புதிய தொற்றாளர்களாக இனங் காணப்பட்டுள்ளதாகவும் அந்த நிலையம் தெரிவித்தது.

கொழும்பு மாவட்டத்தில் நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் 60 பேரும் பிலியந்தல பிரதேசத்தில் 43 பேரும் கல்கிசை மற்றும் மிரிஹான பிரதேசங்களில் தலா 21பேரும் மொரட்டுவ பிரதேசத்தில் 31 பேரும் தலங்கம பிரதேசத்தில் 15 பேரும் இனங்காணப்பட்டுள்ளதாக

06

# ரமழான் சிந்தனை

## தவறுகளுக்கு பரிகாரம், சமூகத்திற்கு நிவாரணம்

மனிதன் தன்னைப்படைத்து பரிபாலித்துக் கொண்டிருக்கும் சர்வ வல்லமையுள்ள அல்லாஹுடனான நெருக்கத்தையும் தொடர்பையும் வளர்த்துக்கொள்வது இன்றியமையாததாகும். அதற்கு ரமழான் நோன்பு காலத்தில் இரண்டு அமல்கள் பெரிதும் பங்களிக்கக் கூடியனவாக உள்ளன.

அவற்றில் ஒன்று உணவையும் பானத்தையும் உடல் இச்சைகளையும் கட்டுப்படுத்தி அல்லாஹ்வுக்காக நோன்பு நோற்றல். மற்றையது அவனுக்காக இரவில் நின்று வணங்குதலாகும்.

இச்செயற்பாடுகளின் ஊடாக அடைந்து கொள்ளும் இறையச்சமும் இறை உணர்வும் தன்னுடைய ஆசாபாசங்களை வெற்றி கொள்ளவும் அல்லாஹ்வின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப வாழ உள்ளத்தை வெற்றி கொள்ளவும் வாய்ப்பை அளிக்கின்றது. இவ்வாறு சமூகத்தின் ஒவ்வொருவரிலும் ஏற்படும் மாற்றங்கள் சமூகப் பண்பாக பரவலடைகின்றது.

என்றாலும் நோன்பு காலத்தில் அறிந்தும் அறியாதும் தவறுகள், குறைபாடுகள், பாவம், வீண் பேச்சுக்கள் என்பவற்றில் மனிதன் ஈடுபட்டிருந்தால் அவற்றுக்கு பரிகாரம் தேட வேண்டும். அதற்காகத் தான் ஸகாத்துல் பித்ர் விதியாக்கப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பில் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், 'வீணான பேச்சுகள், பாலுணர்வு தொடர்பான சொல், செயல் உள்ளிட்ட ஏதேனும் தவறுகள் நிகழ்ந்திருந்தால் அவற்றிலிருந்து நோன்பாளியைத் தூய்மைப்படுத்தவும் ஏழைகளுக்கு உணவாக அமையவுமே ஸகாத்துல் பித்ர் தர்மத்தை நபி(ஸல்) அவர்கள் கடமையாக்கினார்கள்' என்றுள்ளார்கள்.

(ஆதாரம்: அபூதாவூத்)

இத்தர்மமானது குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்காகவும் நிறைவேற்றப்பட வேண்டும். இந்த ஏற்பாடு ரமழானில் விடப்படும் தவறுகள் பிழைகளுக்கு பரிகாரமாக அமைகின்ற அதேவேளை, சமூகத்திலுள்ள தேவையுள்ளவர்கள், ஏழைகள், அநாதைகளின் தேவைகளை நிறைவேற்றவும் செய்கின்றது.

அத்தோடு நோன்பு காலம் நிறைவுற்றதும் கொண்டாப்படும் பெருநாள் தினத்தன்று சமூகத்தில் எல்லோரும் மகிழ்ச்சியாகவும் உணவின்றி இருப்பதை தவிர்ப்பதற்கான ஏற்பாடாகவும் ஸஹாத்துல் பித்ர் திகழுகின்றது.

இஸ்லாம் சமூக நலனை கருத்தில் கொண்டு விதியாக்கியுள்ள விடயங்களில் இதுவும் ஒன்றாகும். ஆகவே இந்தத் தர்மத்தை உரிய ஒழுங்கில் நிறைவேற்றுவதில் ஒவ்வொருவரும் உரிய கவனம் செலுத்தத் தவறலாகாது.

மர்லின் மரிக்கார் ...



நெதர்லாந்திலுள்ள இரசாயன ஆயுதங்களை தடை செய்வதற்கான அமைப்பின் (Organization for the Prohibition of Chemical Weapon) இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள அருணி ரணராஜா, அந்த அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பர்னாண்டோ ஆரியாஸிடம் தனது நியமனத்துக்கான ஆவணங்களை கையளித்த போது...

## சேனைகுடியிருப்பில் இரு மாணவிகள் 3 ஏ



**காரைதீவு குறூப் நிருபர்**

கல்முனையையடுத்துள்ள சேனைக்குடியிருப்பு கணேச மகா வித்தியாலயத்தில், இம்முறை

06

# எந்த விசாரணையும் நடத்தாது ரிஷாட் பதியுதீன் தடுத்து வைப்பு




## மக்கள் காங்கிரஸ் குற்றச்சாட்டு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சம்பந்தப்பட்டுள்ளதாக தெரிவித்து, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனிடம், இன்று வரை அது தொடர்பில், எந்த விசாரணைகளும் இடம் பெறவில்லை.அவரது தனிப்பட்ட விடயங்கள் குறித்தே அவ்வப்போது விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கட்சியின் சட்ட விவகாரப் பணிப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் தெரிவித்தார். மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீனிடம் விசாரணைகள் மிகவும் மந்த கதியிலேயே இடம்பெறுவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் கருத்து தெரிவிக்கையில், சபாநாயகரின் அனுமதி பெறப்படாமலும், சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் இல்லாமலும் குற்றப்புலனாய்வு பிரிவினர் வேறு தேவைக்காகவே அவரை கைது செய்துள்ளனர்.

தடுத்துவைக்கப்பட்ட பின்னர், நீதிமன்றத்துக்கோ சட்டமா அதிபருக்கோ எந்தவிதமான

06

# தேசிய அடையாள அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துள்ள மேலும் ஒரு தொகையினரின் அடையாள அட்டைகள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவிக்கையில், தேசிய அடையாள அட்டையை மே மாதத்தில் பெற்றுக்கொள்வதற்கான நேரம் ஒதுக்கப்பட்டிருந்த நபர்களின் தேசிய அடையாள அட்டைகளே பூரணப் படுத்தப்பட்டு தபால் மூலம் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க இம் மாதம் 31ஆம் திகதி

06

# நாடு மிக மோசமான நிலையில் முறையான தீர்மானம் அவசியம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாடு மிக மோசமான நிலையிலுள்ளதாகவும் இத் தீர்க்கமான தருணத்தில் சரியான தீர்மானங்களை மேற்கொள்வது அவசியமெனவும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது.

நாட்டு மக்கள் தற்போதைய சூழ்நிலையில் மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டுமென கேட்டுக் கொண்டுள்ள அச்சங்கம், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் செயற்பாடுகளையும் அதற்கான உணவுகளை உட்கொள்ளுமாறும் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

நாடு எதிர்கொள்ள நேர்ந்துள்ள மோசமான நிலை தொடர்பில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை மருத்துவர் சங்கம், விசேட மருத்துவர்களின் சங்கம் உள்ளிட்ட சங்கங்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எழுத்து மூலமான கடிதமொன்றை கையளித்துள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுச் செயலாளர் டாகடர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

மேற்படி கடிதத்தில் நாட்டில் பயணத் தடைகளை விதிப்பதற்கான அவசியம் தொடர்பில் வலியுறுத்தப்பட்டுள்ளதுடன் மக்கள் நடமாட்டங்களை மட்டுப்படுத்துவது தொடர்பிலும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா வைரஸ்

06

# ரஷ்யாவுக்கான இலங்கை தூதுவர் வெளிநாட்டமைச்சருடன் சந்திப்பு

ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் எம்.டி. லமாவன்ச வெளிநாட்டமைச்சர் தினேஷ் குணவர்தனவை (06) வெளிநாட்டமைச்சில் வைத்து சந்தித்தார்.

ரஷ்யா, ஆர்மீனியா, பெலாரஸ், மால்டோவா, உஸ்பெகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு இடையேயான பரஸ்பர பொருளாதார, சமூக, கலாசார மற்றும் கல்வி ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்வதற்கான உத்திகள் குறித்து அமைச்சர் குணவர்த்தன தூதுவரின் கவனத்தை ஈர்த்தார்.

கொவிட்19 தொற்றுநோயால் முடங்கியுள்ள இலங்கையின் பொருளாதாரத்தைப்

06



# பாராளுமன்ற பொலிஸ் பாதுகாப்பில் மாற்றம்

பாராளுமன்ற பொலிஸ் பிரிவு, விசேட பாதுகாப்பு பிரிவிற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹிந்த குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். இம்மாதம் 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற பொலிஸ் பிரிவானது இதுவரை மேல் மாகாண தெற்கு பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் இருந்தது.

சில சில நபர்கள்மற்றும் இடங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பிரிவுகள் பிரிவு நிர்வாகம் மற்றும் மேற்பார்வை என்பவற்றை தனி பொலிஸ் பிரிவின் கீழ் செயல்படுவதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் பாதுகாப்பு பிரிவும் மஹிந்த குணரத்னாவின் கீழ் செயல்பட்டு

06

# முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள்; பிரதமருடன் பிரத்தியேக சந்திப்பு

## அவ்வேளையிலேயே பிரதமர் இப்தாருக்கு ஏற்பாடு -முஷாரப் எம்.பி



முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அண்மையில் அலரி மாளிகையில் இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டமை தொடர்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் முதுநபீன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பிரத்தியேகமாக கலந்துரையாடுவதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் 7 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தர்ப்பம் கோரியிருந்ததாகவும் அதற்கு குறித்த தினத்தில் 5.30 மணிக்கு சந்தர்ப்பத்தை வழங்குவதாக பிரதமர் கூறியதாக தெரிவித்த முஷாரப், 5.30 மணிக்கு சந்திப்பு நிகழ்வதாக இருந்தால், இப்தார் நேரம் என எடுத்துக்கூறப்பட்டதையடுத்து தான் இப்தாருக்கான ஏற்பாட்டை செய்வதாக பிரதமர் தெரிவித்ததாகவும் , பிரதமரின் அழைப்பின் நிமித்தம் அங்கு சென்ற தாம், இப்தார் நிகழ்விலும் கலந்து கொண்டு பிரதமருடன் நீண்ட நேரம் கலந்துரையாடியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

06

## கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம்;

# கணக்காளரைக்கூட நியமிக்க முடியாதிருந்த நல்லாட்சி அரசு

## தனது இருப்பை தக்கவைக்க TNAயும் நாடகமாடியது



கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தின் தரம் உயர்வு விடயத்தை காண்பித்து தனது இருப்பை பாதுகாக்க நல்லாட்சி அரசு நாடகமாடியதாக பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தி தர வேண்டும் என அங்கு வாழ்கின்ற அனேகமான தமிழ் மக்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுக்கின்றனர். நல்லாட்சி அரசில் கல்முனை உப பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தி தருமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக பிரதேச மக்கள் கோரிக்கை முன்வைத்து போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

நான், நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனாவின் தமிழ் பிரதிநிதியாக இருந்த காலகட்டத்தில் கல்முனை விவகாரம் தொடர்பில் நடத்திய போராட்டத்துக்கு நேரில் சென்று இருந்தேன்.

நல்லாட்சி அரசாங்கத்தில் பாராளுமன்றத்தை வழி நடத்துபவர்களாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான

06

## ரூபா நோட்டுகளுக்கு பதிலாக சட்டவிரோத

# அமெரிக்க டொலர்களை அச்சிடும் தகவல்கள் கசிவு

## அவதானமாக இருக்குமாறு அஜித் ரோஹன கோரிக்கை



100 அமெரிக்க டொலர் போலி நாணயத்தாள்களை அச்சிடும் நடவடிக்கைகள் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதனால், அமெரிக்க டொலர்களை பயன்படுத்தும் போது, அது குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டும் எனவும் அவர் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

போலியான டொலர்கள் அச்சிடப்படுவது குறித்து குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் போலி நாணயங்கள் தொடர்பான விசாரணை பணியகம், விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இந்த விசாரணைகளில் சில சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

நாளுக்கு நாள் இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வருவதன் காரணமாக டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதால், போலியான டொலர் நாணயத்தாள்களை அச்சிடும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

100 அமெரிக்க டொலர் நாணயத்தாள்கள் புழக்கத்தில் விடப்பட்டுள்ளதாகவும் அஜித் ரோஹன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 151.81 | 156.25 |
| கனடியன் டொலர் | 160.09 | 165.03 |
| யூரோ | 235.39 | 242.49 |
| ஜப்பான் யென் | 1.7903 | 1.8452 |
| சிங்கப்பூர் டொலர் | 146.89 | 151.18 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 272.78 | 280.61 |
| சுவிஸ் பிராங்க் | 214.45 | 221.57 |
| அமெரிக்க டொலர் | 196.77 | 201.87 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 529.41 | கட்டார் ரியால் | 54.81 |
| குவைத் டினார் | 662.13 | சவூதி ரியால் | 53.21 |
| ஓமான் ரியால் | 518.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.33 |

தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் சித்திரை மாதம் 27ம் நாள் திங்கட்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1442 ரமழான் பிறை 27


**குறள் தரும் சிந்தனை**

வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்

*விரும்பிய பயன்களை விரும்பியவாறே அடைய முடியுமாகையால் செய்யத்தக்க தவம் இந்நிலையிலும் (இல்லற வாழ்க்கையிலும்) முயன்று செய்யப்படும்.*

# மக்கள் உணர்ந்து கொள்ளாதவரை அச்சுறுத்தல் நீங்கப் போவதில்லை!

இலங்கையில் தமிழ், சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் மீண்டும் உருவெடுத்த கொரோனா தொற்று அலை தற்போது தீவிரமான பரவல் நிலைமையில் காணப்படுகின்றது. நாளாந்தம் புதிதாக கொரோனா தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையானது ஆயிரத்தையும் தாண்டியபடி அதிகரித்துச் செல்கின்றது. கொரோனா தொற்றினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் நாளாந்தம் அதிகரிப்பையே காட்டுகின்றது.

நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி இருபத்துநான்கு மணி நேரத்தில் 22 பேர் இத்தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர். அரசாங்கத்தினால் கொரோனா தொற்று பரவலை தடுப்பதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும், பொதுமக்களுக்கான அறிவுறுத்தல்களும் இடைவிடாது மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், வைரஸ் தொற்று பரவல் இன்னுமே கட்டுப்பாட்டுக்குள் வந்து விடவில்லை. இன்றைய தீவிர நிலைமையானது தணிவின்றி தொடர்ந்து செல்லுமானால் மிகவும் ஆபத்தான கட்டமொன்றுக்கு நாடு முகம் கொடுக்க நேரிடுமென்றே மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்துள்ள இடங்களென அடையாளம் காணப்பட்டுள்ள பல பிரதேசங்கள் முடக்கப்பட்டுள்ளன. கொரோனா தொற்று பரவல் எங்கெல்லாம் அதிகரிக்கின்றதோ, அப்பிரதேசங்கள் உடனடியாகவே முடக்கப்படும் என்று கொவிட்19 கட்டுப்பாட்டுக்கான பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொவிட் பரவல் நிலைமை இவ்வாறிருக்கையில், நாடு முற்றாக முடக்கப்படுவதற்கான சாத்தியம் இப்போதைக்கு இல்லையென்றே அரசாங்க தரப்பு தகவல்கள் மூலம் தெரிய வருகின்றது. நாட்டை முற்றாக முடக்குவதோ அல்லது போக்குவரத்தை தடை செய்வதோ நாட்டின் பொருளாதாரத்திற்கு மீண்டும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தி விடும் என்பதே அரசாங்கத்தின் எண்ணமாக இருக்கின்றது.

கொவிட் தொற்று அதிகரித்துள்ள பிரதேசங்களை மாத்திரம் முடக்க நிலையில் வைத்திருப்பதே அரசாங்கத்தின் இப்போதைய நிலைப்பாடாக உள்ளது. அவ்வாறான முடக்கத்தின் மூலம், அங்கிருந்து வேறு இடங்களுக்கு வைரஸ் தொற்று பரவுவதை ஓரளவு தடுக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது நாட்டில் இன்று உருவாகி இருப்பது நெருக்கடியான நிலைமை ஆகும். ஆனால் இந்த நிலைமையானது இலங்கைக்கு மாத்திரம் உரியதல்ல. எமது அயல்நாடான இந்தியா உட்பட உலகின் பல நாடுகள் தற்போது கொவிட் 19 பரவலின் மூன்றாவது அலைக்கு முகம் கொடுத்துள்ளன. நாட்டை எக்காலமும் முடக்க நிலையில் வைத்திருப்பதனால் கொரோனா பரவுவதை நிரந்தரமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட முடியாது என்பதே உலகின் பல நாடுகளின் இன்றைய முடிவாக இருக்கின்றது. ஏனெனில் ஒட்டுமொத்த உலகமும் கொரோனா அச்சுறுத்தலில் இருந்து முற்றாக விடுபடுவதற்கு இன்னும் ஓரிரு வருடங்கள் செல்லக் கூடும் என்பதே உலகின் பிரபல மருத்துவ அறிவியலாளர்களின் கருத்தாக இருக்கின்றது.

ஒவ்வொருவரும் சுயமான பாதுகாப்பு பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதுடன் மாத்திரமன்றி, தமக்கு நெருக்கமான மற்றையோரை பாதுகாத்து கொள்வதிலும் போதிய கவனம் எடுத்து கொண்டால் மாத்திரமே இத்தொற்று பரவுகின்ற தீவிரத் தன்மையை விரைவாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

ஆனால் இலங்கையில் பெரும்பாலான மக்களிடம் கொரோனா அச்சம் தொடர்பான விழிப்புணர்வு மிகக் குறைவாக இருப்பதாக பொதுச் சுகாதார பரிசோதகர்களும் மருத்துவ சுகாதாரத் துறை சேர்ந்தோரும் சுட்டிக் காட்டுகின்றனர். வைரஸ் தொற்றை தவிர்த்துக் கொள்வதற்கான அடிப்படை பாதுகாப்பு பழக்கவழக்கங்களான முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணுதல், கைகளின் சுத்தம் பேணுதல் போன்றவற்றைக் கூட பலர் அலட்சியம் செய்வதையே காண முடிகின்றது. வீதிகளில் முகக்கவசம் அணிந்து நடமாடாதோரை பொலிஸார் கைது செய்யும் காட்சிகளை ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. பொதுமக்களின் அலட்சியத்துக்கு இதனை விட வேறு உதாரணம் தேவையில்லை.

பொதுமக்கள் இவ்வாறு அலட்சியமாக நடந்து கொள்வார்களானால் கொவிட் பயங்கரத்தில் இருந்து மனித குலம் விடுபடுவதென்பது முடியாத காரியமாகிப் போய் விடலாம். நாட்டின் அனைத்து இடங்களிலும் மக்கள் அவதானமாக நடந்து கொள்கின்றனரா என்பதை கண்காணிப்பதென்பது இலகுவான காரியமல்ல. நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் அதிகாரிகள் சென்று சோதனை செய்வதென்பது இயலுமானதல்ல. அவ்வாறு கட்டாயத்தின் பேரின் மக்களை வற்புறுத்தி சுகாதாரப் பழக்கங்களை கடைப்பிடிக்குமாறு கோருவதென்பது பலனளிக்கப் போவதுமில்லை.

நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவரும் இன்றைய அச்சுறுத்தல் மிகுந்த காலகட்டத்தைப் புரிந்து கொண்டு, பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டால் மாத்திரமே கொரோனா தொற்று பரவல் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். ஆபத்தை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டியவர்கள் மக்களாவர்.

editor.tkn@lakehouse.lk

# மகத்துவம் மிக்க இரவு 'லைலத்துல் கத்ர்'

ரமழான் மாதத்தின் கடைசிப் பத்து நாட்களுக்குள் தான் `லைலத்துல் கத்ர்' எனும் மகத்துவமிக்க இரவு இருக்கிறது. அந்த இரவின் சிறப்புகளை அல் குர்ஆனும் நபிமொழிகளும் மிக அழுத்தமாகச் சொல்லி இருக்கின்றன. குர்ஆனின் 97வது அத்தியாயம் இவ்விரவின் பெயரிலேயே இறக்கி அருளப்பட்டுள்ளதோடு அதன் சிறப்புகள் பின்வருமாறு அறிவிக்கப்பட்டிருக்கிறது.



- இந்த இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது. அதாவது, ஆயிரம் மாதங்கள் ஒருவர் வணக்கங்களில் ஈடுபட்டுப் பெறுகின்ற நன்மைகளை விடவும் அதிகமான நன்மைகளை இந்த ஓர் இரவை அடைவதின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.
- இவ்விரவில் வானவர்களின் சிறப்பு வருகை இடம்பெறுகிறது. அவர்களுடன் அவர்களின் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்களும் வருகிறார்கள்.
- ஜிப்ரீலும் அவர்களது படையும் இறங்குவதின் காரணம், அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளைக் கொண்டு வருகிறார்கள். விதி நிர்ணயிக்கப்படுகிறது.
- இவ்விரவில் அமைதி நிலவும். அது அதிகாலை வரை நீடித்திருக்கும்.

`லைல்' என்றால் இரவு. `கத்ர்' என்றால் சிறப்பு, கண்ணியம் அல்லது விதி, தீர்ப்பு. இவ்விரண்டு அர்த்தங்களும் அந்த இரவுக்குப் பொருந்தும். எப்படியெனில், அவ்விரவில் தான் விதியிலுள்ளவற்றை நடைமுறைப்படுத்த அல்லாஹ் கட்டளைகளை இறக்குகிறான்.

ஒருவர் நம்பிக்கையோடும் நன்மையை எதிர்பார்த்தும் லைலத்துல் கத்ர் இரவில் நின்று வணங்க, அது லைலத்துல் கத்ர் இரவாகவே அமைந்துவிட்டால் அவர் முன்செய்த பாவங்கள் மன்னிக்கப்படும்.

**(ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்)**

அதேநேரம் அறிஞர் முஹம்மது ஸாலிஹ் அல்உஸைமீன் (ரஹ்) அவர்களின் கூற்றுப்படி, நம்பிக்கையுடன் தொழுவது என்றால் அல்லாஹ்வின் மீதும் இவ்விரவில் தொழக்கூடியவர்களுக்கு அல்லாஹ் தயார் செய்துவைத்துள்ள மறுமை பாக்கியங்கள் மீதும் நம்பிக்கை கொண்டு தொழுதல் என்று பொருளாகும்.

எதிர்பார்ப்புடன் தொழுவது என்றால், `நற்கூலியையும் நன்மையையும் எதிர்பார்த்து தொழுதல்' என்று பொருள். இவ்விரவை அறிந்தவர்களுக்கும் இச்சிறப்பு கிடைக்கப்பெறும், அறியாதவர்களுக்கும் கிடைக்கும். ஏனெனில், இக்கூலி கிடைக்கும் விஷயத்தில் இவ்விரவை அறிந்திருக்க வேண்டுமென நபி (ஸல்) அவர்கள் நிபந்தனை விதிக்கவில்லை.

அன்னை ஆயிஷா (ரலி) `அல்லாஹ்வின் தூதரே, எந்த இரவு லைலத்துல் கத்ர் என்பதை நான் அறிந்து கொண்டால், நான் என்ன கூற வேண்டும்?' என்று கேட்க, அதற்கு நபியவர்கள் `யா அல்லாஹ்! நிச்சயமாக நீ மன்னிப்பவன்; கண்ணியமானவன். மன்னிப்பதை விரும்புகிறவன். ஆகவே என்னை மன்னித்துவிடு' என்று பிரார்த்தனை செய்' என்றார்கள். **(ஆதாரம்: ஜாமிவுத் திர்மிதீ)**

ஒரு தடவை நபி(ஸல்) அவர்கள் லைலத்துல் கத்ர் பற்றி எங்களுக்கு அறிவிப்பதற்காக வெளியே வந்த போது இரண்டு முஸ்லிம்கள் சச்சரவு செய்து கொண்டிருந்தனர். இச்சமயம் நபியவர்கள், நான் `லைலத்துல் கத்ரை உங்களுக்கு அறிவிப்பதற்காக புறப்பட்டேன். அப்போது இன்னாரும் இன்னாரும் சச்சரவு செய்துகொண்டிருந்தனர். அதனால் அது பற்றிய விளக்கம் நீக்கப்பட்டுவிட்டது. அது உங்களுக்கு நன்மையாக இருக்கலாம்' என்று கூறியதாக உபாதா இப்னு ஸாமித் (ரலி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார். **(ஆதாரம்: புகாரி)**

ஸஹீஹ் முஸ்லிமில் அபூசயீது அல் குத்ரீ (ரலி) வழியாக அறிவிக்கப்படும் நபிமொழியில், `அந்த இரண்டு முஸ்லிம்களும் தங்கள் உரிமைகள் குறித்து தர்க்கம் செய்துகொண்டார்கள் என்றும், அந்த இருவருடனும் ஷைத்தான் இருந்தான்' என்று நபியவர்கள் கூறியதாக வந்துள்ளது.

இதன்படி முஸ்லிம்கள் சச்சரவு செய்துகொள்வது எப்பேர்ப்பட்ட இழப்பைக் கொண்டு வரும் என்ற படிப்பினையை இந்நபிமொழி எடுத்துக்காட்டுகின்றது. லைலத்துல் கத்ர் எது என்பது மறைக்கப்பட்டு விட்டதால், மறுமை நாள் வரை அதைத் தேடி அமல் செய்துகொள்கிற நிலைக்கு முஸ்லிம்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

என்றாலும் அந்த இரவை எப்படித் தேடிக்கொள்ள வேண்டும் என்பதையும் நபியவர்கள் கற்றுக்கொடுத்துள்ளார்கள். அதாவது இம்மகத்துவம் மிக்க இரவை ரமழான் மாதத்தின் கடைசிப் பத்தில் ஒற்றைப்படையான நாட்களில் தேட வேண்டும். இதன் நிமித்தம் நபி (ஸல்) அவர்கள் ரமழானின் கடைசிப் பத்து நாட்களில் இஃதிகாஃப் இருந்துள்ளார்கள். `ரமழானின் கடைசிப் பத்து நாட்களில் லைலத்துல் கத்ரைத் தேடுங்கள்' என்றும் அன்னார் கூறியுள்ளார்கள்.

நீங்கள் அந்த இரவை இறுதிப் பத்து இரவுகளில் தேடிக்கொள்ளுங்கள். உங்களில் ஒருவருக்குப் பலவீனம், அல்லது இயலாமை ஏற்பட்டால், எஞ்சிய ஏழு இரவு களில் (ஒன்றிலாவது அதைத் தேடும் முயற்சியில்) தளர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டு விட வேண்டாம் என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அபூநள்ரா (ரஹ்) எனும் தாபிஈ இதன் விளக்கத்தை அபூசயீது (ரலி) அவர்களிடம் வினவிய போது `இரவின் எண்ணிக்கை பற்றி எங்களைவிட நீங்களே நன்கறிந்தவர்கள்' என்றேன். அதற்கு அவர்கள், `ஆம். உங்களை விட நாங்களே அதற்குத் தகுதியானவர்கள்' என்றார்கள். நான், `ஒன்பது, ஏழு, ஐந்து என்பவை எவை?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், `இருபத்தொன்றாவது இரவு முடிந்து, அதையடுத்து வரும் 22வது இரவே 'ஒன்பது' ஆகும். 23வது இரவு முடிந்து அடுத்து வரும் (இருபத்து நான்காவது) இரவே `ஏழு' ஆகும். 25 வது இரவு முடிந்து அடுத்து வரும் இரவே `ஐந்து' ஆகும்' என்று பதிலளித்தார்கள்.

**(ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்)**

இப்படியும் தேடிக்கொள்ள முடியாதவர்கள், 27 வது இரவிலாவது வணக்கங்களைச் செய்து கொள்ளலாம். சிலர் 27வது இரவுக்கு எந்தச் சிறப்பும் இல்லை என்று நினைக்கிறார்கள். அது தவறு. நபியவர்கள் தம் தோழர்களை அவ்விரவில் அதிகம் வணக்கங்கள் புரிய ஏவியுள்ளார்கள். உபை இப்னு கஅப் (ரலி) அவர்கள் லைலத்துல் கத்ர் குறித்து கூறும்போது, `அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அந்த இரவைப் பற்றி நான் அறிவேன். அவ்விரவில் நின்று வணங்குமாறு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்களுக்குக் கட்டளையிட்டார்கள். அது அநேகமாக 27 வது இரவுதான் என்று நினைக்கிறேன்' என்பார்கள்.

**(ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்)**

ஆகவே ரமழானின் இறுதிக்கட்டத்தை அடைந்திருக்கும் இந்த சூழலில் ஆயிரம் மாதங்களை விடவும் சிறப்பு மிக்க லைத்துல் கத்ர் இரவை அடைந்து கொள்ள அதற்கேயுரிய ஒழுங்கில் முயற்சிப்போம். அம்முயற்சியை தற்போது உலகிற்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் கொவிட் 19 தொற்றின் பரவுதலுக்கு துணைபோகாத வகையில் அமைந்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

# தமிழகத்தில் இன்று முதல் இரு வார கால ஊரடங்கு

## கொரோனா தொற்று கட்டுமீறியுள்ள நிலையில், சட்டப் பேரவை கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் பெருவெற்றி ஈட்டியதையடுத்து தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று 11ஆம் ஆரம்பமாகின்றது.

16வது தமிழக சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடர் இன்று 11ஆம் திகதி காலை 10.00 மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கின் மூன்றாவது தளத்தில் நடைபெறுகிறது. இதில், தேர்தலில் வெற்றி பெற்ற புதிய சட்டப்பேரவை உறுப்பினர்கள் சட்டப்பேரவையில் பதவியேற்றுக் கொள்கின்றனர்.

இதேவேளை சபாநாயகர், துணை சபாநாயகர் தேர்தல் நாளைமறுதினம் 12ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறுகிறது.

இதுஒருபுறமிருக்க கொரோனா தடுப்பு நடவடிக்கையாக, தமிழகத்தில் இன்று 10ஆம் திகதி முதல் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தில் இன்று அதிகாலை 04.00 மணிமுதல் மே 24ஆம் திகதி அதிகாலை 04.00 மணிவரை முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படுகிறது. இந்த முழு ஊரடங்கு காலத்தில் மதுபான கடைகள் திறக்கப்பட மாட்டாது. மளிகை, பலசரக்குகள், காய்கறி, இறைச்சி, மீன் விற்பனை கடைகள் ஆகியவை மதியம் 12.00 மணி வரை செயல்படும். இதை தவிர பிற கடைகள் இயங்க அனுமதி இல்லை. தேநீர் கடைகள் நண்பகல் 12.00 மணிவரை செயல்படலாம்; அமர்ந்து உண்பதற்கு அனுமதி இல்லை. காய்கறி மற்றும் பூ விற்பனை செய்யும் நடைப்பாதை கடைகள் நண்பகல் 12.00 மணி வரை அனுமதிக்கப்படும்.

அனைத்து தனியார் அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் இயங்க தடை விதிக்கப்படுகிறது. இன்று10ஆம் திகதி முதல் மே 24ஆம் திகதி வரை மாவட்டங்களுக்குள்ளும் மாவட்டங்களுக்கு இடையேயுமான அரசு மற்றும் தனியார் பேருந்துகள், ஆட்டோ உள்ளிட்ட போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. முழு ஊரடங்கு காலத்தில் அம்மா உணவகங்கள் தொடர்ந்து செயல்படும். நியாய விலைக் கடைகள் காலை 08.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை செயல்படும். வீதியோர உணவகங்கள் செயல்பட முழுமையாகத் தடை விதிக்கப்படுகிறது. முழு ஊரடங்கு காலத்தில் உணவகங்களில் உணவுப் பொதி வழங்கலாம்.

இன்று முதல் மே 24ஆம் திகதி வரை விவசாயம் சார்ந்த பொருட்களை விற்பனை செய்யும் கடைகள் மதியம் 12.00 மணிவரை செயல்படலாம். விமானம், ரயில் ஆகியவற்றில் வெளிநாடு, வெளி மாநிலங்களில் இருந்து வரும் பயணிகளுக்கு இ பாஸ் முறை தொடரும். இரண்டு வாரங்களுக்கு தங்கும் விடுதிகள் செயல்பட அனுமதி இல்லை. வணிக காரணம், மருத்துவம் சார்ந்தப் பணிகளுக்காக மட்டும் தங்கும் விடுதிகள் செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.






தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் அழகு நிலையங்கள், முடி திருத்தும் நிலையங்கள் இயங்க தடை விதிக்கப்படுகிறது. மின்சாரம், குடிநீர், உள்ளாட்சி, மகளிர் உரிமைத்துறை தவிர மற்ற மாநில அலுவலகங்கள் இயங்காது.

தமிழகத்தில் கொரோனா பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. காலை 11.30 மணிக்கு நாமக்கல் கவிஞர் மாளிகையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

கொரோனா உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் குறித்து இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

தமிழகத்தில் கொரோனா 2வது அலை ருத்ரதாண்டவம் ஆடி வருகிறது. நாள் ஒன்றுக்கு 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று உறுதியாகி வருகிறது. இதனை கட்டுப்படுத்தும் நோக்கில் தமிழக அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகிறது. ஆனாலும், பாதிப்பு எண்ணிக்கை குறைந்தபாடில்லை.

இதனால் கட்டுப்பாடுகளை தீவிரப்படுத்துமாறு பல தரப்பில் இருந்து கோரிக்கை எழுந்தது. இதனையடுத்தே தமிழகத்தில் முழு ஊரடங்கு பிறப்பித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதனை மக்கள் முழுமையாக கடைப்பிடிக்குமாறும் அரசு தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இரு நாட்களில் ஊரடங்கு தொடங்கிவிடும் என்பதால், மக்கள் பொருட்களை வாங்க ஆர்வம் காட்டியதால் பல இடங்களில் கூட்டம் அலைமோதியது. பலர் முகக்கவசம், சமூக இடைவெளியை கடைப்பிடிக்கவில்லை.



# வைத்தியசாலை கட்டட நிர்மாணங்களை துரிதப்படுத்துமாறு பிரதமர் பணிப்புரை

கொழும்பு தெற்கு களுபோவில வைத்தியசாலை வளாகத்தை சுற்றி தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய வார்ட்டுகள் மற்றும் கட்டடங்களின் நிர்மாணப் பணிகளை விரைவில் நிறைவு செய்யுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

களுபோவில வைத்தியசாலை உள்ளிட்ட ஏனைய வைத்தியசாலைகளில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடங்களின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தி விரைவில் மக்கள் பாவனைக்கு அவற்றைக் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் செயல்பாட்டுத் திறனை அதிகரிப்பதற்குத் தேவையான கட்டடங்கள் உள்ளிட்ட உள்



கட்டமைப்பு வசதிகளை விரைவுபடுத்துமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள பல அரச நிறுவனங்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில், கிராமப்புற வீடமைப்பு மற்றும் கட்டுமான, கட்டடப் பொருள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்தவின் மேற்பார்வையில் இதற்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டன.

இதன் கீழ், கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் (களுபோவில மருத்துவமனை) கட்டப்படவுள்ள 10 மாடி கட்டட வளாகத்தின் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்து விரைவாக முடிக்குமாறு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

இந்த 10 மாடிக் கட்டடத்தை ரூபா 743 மில்லியன் செலவில் சுகாதார அமைச்சு நிர்மாணித்து வருகிறது. புதிய கட்டடத்தில் 07 சிகிச்சை அறைகள் (சத்திரசிகிச்சை கூடங்கள்), 05 ஆய்வகங்கள், 02 வெளிநோயாளர் பிரிவுகள் மற்றும்

## களுபோவில மருத்துவமனையின் புதிய கட்டடங்களின் கட்டுமாணப் பணிகள் விரைவில் நிறைவு

மிலேனியம் எனப்படும் குடியிருப்பு மருத்துவமனை வார்ட் வளாகங்கள் உள்ளடங்குகின்றன. மருத்துவமனையில் ஏராளமான நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கட்டட நிர்மாணிப்பு தொடர்பான மேற்பார்வையில் பங்கேற்ற இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த, இந்த வசதிகளை விரைவில் மக்களுக்கு வழங்குவதே ஜனாதிபதி மற்றும் பிரதமரின் குறிக்கோள் என்று கூறினார்.

“இது விரைவில் முடிக்கப்பட வேண்டிய பணி. வைத்தியசாலைகளை மேம்படுத்துவதன் மூலம் கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும்.

இது ஒரு தனித்துவமான வளர்ச்சி. இது தற்போதைய நிலைமையில் நாட்டுக்குத் தேவையான ஒன்று. கொவிட் 19 அச்சுறுத்தலை அப்போதுதான் கட்டுப்படுத்தலாம். சுகாதார ஆலோசனையை எப்போதும் பின்பற்ற வேண்டும்” என்று இராஜாங்க இந்திக அனுருத்த மேலும் தெரிவித்தார்.

கொவிட் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் இலங்கை நல்ல நிலையில் இருப்பதால், அதைக் கட்டுப்படுத்த சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது. தற்போது பல மருத்துவமனைகளில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய வார்ட்டுகள் மற்றும் புதிய கட்டட வளாகங்களை விரைவில் நிர்மாணித்து முடிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட கட்டுமான நிறுவனங்களை அறிவுறுத்தியுள்ளார்.இந்த கட்டுமானங்கள் அனைத்தும் விரைவில் இலங்கை அரச பொறியியல் நிறுவனத்தினால் கிராமப்புற வீடமைப்பு மற்றும் கட்டுமான, கட்டடப் பொருள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. பிரதமரின் அறிவுறுத்தலின் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த மற்றும் நகர அபிவிருத்தி, வீட்டு வசதி அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா ஆகியோர் கட்டுமானப் பணிகளை மேற்பார்வையிட்டு வருகின்றனர்.





**டப்ளியூ.**
**பிரசாத் மஞ்சு...**
**(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஊடக செயலாளர்)**

# வருமானம் தரும் மூலங்கள் இருந்த போதிலும் கல்முனை மாநகரசபை வளங்கள் வீணடிப்பு




## மாநகர சபை உறுப்பினர் க.சிவலிங்கம் குற்றச்சாட்டு

‘கிழக்கில் அதிகூடிய வருமானம் பெறுகின்ற வளங்களைக் கொண்ட சபையாக கல்முனை மாநகரசபை உள்ளது. ஆனால் பொதுச்சந்தை குத்தகை மற்றும் சந்தைக் கடைகளின் வாடகை பெறுவதில் குறைபாடுகளும், சரியான முறையில் அறிவிடப்படாத நிலையும் காணப்படுகின்றன. வங்கியொன்று குறைந்த குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மாநகர சபையின் வளங்கள் வீணடிக்கப்படுகின்றன. நிதிக்குழுவில் வெளிப்படைத்தன்மை இல்லை’ எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சிவலிங்கம் குற்றம் சாட்டுகிறார்.

கல்முனை 12ஆம் வட்டாரத்தில் தெரிவான உறுப்பினர் க.சிவலிங்கம் ஓய்வுநிலை அரச உத்தியோகத்தராவார். விவசாயத் திணைக்களத்தில் சிரேஷ்ட விவசாயப் போதனாசிரியராக கடமையாற்றியவர். இறுதியாக ஐ.நாவின் உணவு விவசாய நிறுவனத்தில் மன்னார் மாவட்ட இணைப்பாளராகச் சேவையாற்றியவராவார். மும்மொழியிலும் புலமை வாய்நதவர்.

கல்முனை மாநகர சபையில் இறுதியாக இடம்பெற்ற பாதீட்டின் போது எதிர்த்து வாக்களித்தமை தொடர்பாக, கட்சியால் விளக்கம் கோரும் கடிதம் கிடைக்கப் பெற்றமை தொடர்பாக அவரிடம் கேட்ட போதே இந்த நேர்காணலை வழங்கினார்.

**கேள்வி: கல்முனை மாநகரசபையில் வளப்பங்கீடுகள் ஏனைய செயற்பாடுகள் எவ்வாறு உள்ளன?**



**பதில்:** வளப்பங்கீடுகள், சேவைகள் சமமாக பங்கிடப்படுகின்றன என கூற முடியாது. இப்போதும் நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் வட்டாரங்களில் மாநகர சபையின் சேவைகளை பெறுவதில் பாரபட்சங்கள் உள்ளன.

**கேள்வி: மாநகர சபையின் பொது வசதிகள் குழுவில் நீங்கள் தவிசாளராக இருந்தீர்கள். அப்போது எவ்வாறான சேவைகள் முன்னெடுக்கப்பட்டன. தற்போதும் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றீர்களா?**

**பதில்:** இந்தக் குழுவில் தற்போது நான் இல்லை. நான் பொதுவசதிகள் குழுவுக்கு தவிசாளராக இருந்த போது, 45 தீர்மானங்கள் முன்னறியப்பட்டு சபையின் அனுமதியும் கிடைத்தது. ஆனால் இரண்டு மூன்று தீர்மானங்கள் தான் நிறைவேற்றப்பட்டன. இன்றும் இவை கிடப்பில் உள்ளன. முக்கியமாக நிதிப் பிரிவின் கணக்கறிக்கையை பார்க்கின்ற போது வருமானமும் செலவும் ஒன்றாக காணப்படுகின்றன. மாநகர சபை உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் இதுவரை கிடைக்கவில்லை. பொது வசதிக்கான புது நிர்மாணங்கள் நடைபெறவுமில்லை. கடந்த வருடம் நிதிக்குழுவில் நானும் அங்கத்தவராக இருந்தேன் அப்போது செலவினங்களை கட்டுப்படுத்தினோம். கேள்வி நடைமுறைகளில் கவனமாக இருந்தோம்.

கடந்த பாதீட்டுக்கு எங்கள் கட்சியில் இருந்து இருவர் எதிராக வாக்களித்திருந்தோம். ஆனாலும் ஏனையோர் அதிகமாக ஆதரவாக வாக்களித்ததால் பாதீடு வெற்றி பெற்றது. அனைத்து நிலையியல் குழுக்களின் தவிசாளர் உறுப்பினர்களையும் தங்களுக்கேற்ப மாற்றியமைத்துள்ளார்கள்.

**கேள்வி: தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் 12 ஆம் வட்டாரத்தின் எல்லைப் பகுதியில் தமிழர்களின் காணிகள் விற்பனை செய்யப்படுவதில் அடிக்கடி பல முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இது இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படவும் வழிவகுக்கும். இவ்விடயம் தொடர்பாக தங்களின் கருத்து என்ன?**

**‘கல்முனை மாநகர சபையின் வளங்கள் வீணடிக்கப்படுகின்றன’ என்று கூறுகின்றார் மாநகர சபை உறுப்பினர் க.சிவலிங்கம்.**

**பதில்:** முக்கியமாக 12 ஆம் வட்டாரம் கல்முனை மாநகரத்தின் இதயமாக காணப்படுகின்றது. மூவின மக்களும் வாழ்கின்றார்கள். இவ்வட்டாரத்தில் அடிக்கடி பிரச்சினைகள் தோன்றுகின்றன. உதாரணமாக பாதையின் பெயர் மாற்றம், எல்லையில் உள்ள தமிழரின் காணிகளை அதிக விலை கொடுத்து வாங்குதல் போன்றனவாகும். இவைகளால் இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன. இந்த பிணக்குகளை முன்னின்று தீர்ப்பதால் எம்மை இனமுரண்பாட்டாளர் என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்ட சம்பவங்களும் உள்ளன.

கேள்வி: கல்முனை மாநகர சபையில் பாதீட்டுக்கு எதிராக வாக்களித்தமைக்கு நீங்கள் அங்கம் வகித்த கட்சியில் இருந்து ஏதும் அழுத்தங்கள் கடிதங்கள் வந்ததா?

பதில்: பாதீட்டுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான நானும், சந்திரசேகரம் ராஜனும் எதிராக வாக்களித்தோம். எமது நியாயமான கோரிக்கையான கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு முட்டுக்கட்டை போடும் முஸ்லிம் காங்கிரஸின் ஆட்சிக்கு எதிரான நிலைப்பாட்டினாலும், பிரதேச செயலக ஆலயத்திற்கு எதிர்ப்பாக முதல்வர் செயற்பட்டவர் என்பதாலும், பொது அமைப்புகள் எங்களிடம் கேட்ட தற்கிணங்கவும் எதிராக வாக்களித்தோம். ஆனால் எங்கள் கட்சி இதற்கு எதிராகவோ ஆதரவாகவோ வாக்களிக்க பணிக்க

**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)

# மருதமுனை, பெரியநீலாவணை பிரதேச வீதிகள் கொரோனா தொற்றுக்கு மத்தியிலும் அபிவிருத்தி

ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் மருதமுனை கடற்கரை வீதி மற்றும் பெரியநீலாவணை வீ.சி. வீதி என்பன காபட் வீதியாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. உள்ளூர் வீதிகளை காபட் வீதிகளாக புணரமைப்பு செய்யும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் இவ்விரு வீதிகளும் காபட் வீதியாக புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

மருதமுனை கடற்கரை வீதி, வீ.சி. வீதி என்பன இக்கிராமத்தின் முதன்மை வீதிகளாகும். மிக நீண்ட காலமாக குண்டும் குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று பலரும் பல தேர்தல் காலங்களில் பேசுவார்கள். அடிக்கல் கூட பல தடவைகள் நடப்பட்டன. எனினும் இவ்வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை.

குறித்த வீதிள் மிக நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படாமல் மழை காலங்களில் நீரில் மூழ்கிக் காணப்பட்டன. வாகனங்களில் பயணம் செய்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர்.

இந்த நிலையில் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சிபீடமேறி ஒரு ஆண்டு நிறைவு பெறுவதற்கு முன்னர் நாட்டின் பல்வேறு சவால்களுக்கு எதிர்நீச்சல் போட்டு பொதுமக்களை முன்னிலைப்படுத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.





ஜனாதிபதியின் ஒரு இலட்சம் கிலோ மீட்டர் உள்ளூர் வீதிகளை நவீன காபட் வீதிகளாக அபிவிருத்தி செய்யும் வேலை திட்டம் கடந்த ஓரிரு மாதங்களுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்டது.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் மருதமுனை கடற்கரை பிரதான வீதி மற்றும் பெரியநீலாவணை வீ.சி. வீதி என்பன தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றுநோய் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் காபட் வீதியாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளமைக்கு மக்கள் தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

**ஏ.எல்.எம்.ஷினாஸ்...**
(பெரியநீலாவணை விசேட நிருபர்)

# பண்டாரவளை நகர பொதுச்சந்தை பூட்டு

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

பண்டாரவளை நகர பொதுச் சந்தை நேற்று (09.05.2021) முதல் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ள நிலையில், அப்பகுதியில் சுகாதார அதிகாரிகளும், பொலிஸாரும் தொடர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக இவ்வாறு சந்தை மூடப்பட்டிருந்தாலும் இன்று காலை சில வியாபாரிகள், அத்துமீறி விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதனையடுத்து பண்டாரவளை மாநகர சபை, பிரதேச செயலக சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பண்டாரவளை பொலிஸார் இணைந்து அவர்களை திரும்பியனுப்பினர்.

வெல்லவாய, ஹப்புத்தளை பகுதிகளைச் சேர்ந்த சில்லறை வியாபாரிகளே இவ்வாறு திருப்பி அனுப்பட்டனர்.

## நூற்றுக்கும் மேற்பட்ட...

முடக்கப்பட்டுள்ளதாக கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நேற்றும் சில கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தல் முடக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் கொரோனா தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க தேவையான சகல நடவடிக்கைகளை எடுத்துவருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.பரவலை தடுக்கும் நோக்குடனே சில பிரதேசங்களை முடக்கி வருவதாகவும் மக்கள் இதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

அதேவேளை கடந்த வாரம் மாத்திரம் நூற்றுக்கு மேற்பட்ட கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் மரணமடைந்துள்ள நிலையில் நோயாளர்களின் கவனயீனம் காரணமாகவே அதில் பெரும்பாலான மரணங்கள் இடம்பெற்றுள்ளதாக சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

தமக்கு வைரஸ் தொற்று இருப்பதை தெரிந்து கொண்டும் பெருமளவிலானோர் ஆஸ்பத்திரிக்கு செல்லாமல் நோய் உக்கிரமடைந்த பின்னரே மருத்துவரை நாடுகின்றனர். அத்தகைய சூழ்நிலையில் நோயாளிகளை பாதுகாப்பது பெரும் கஷ்டமாகி விடும். மறுபுறம் வைரஸ் தொற்று நோயாளர்கள் என இனங்காணப்பட்டுள்ள பலர் மறைந்து வாழ்வதாலும் பெரும் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவத்தளபதி மேலும் தெரிவிக்கையில்,

| 20. | Construction of 60$m^3$capacity 12m height Ferro cement elevated tank, 3mx3m Pump House, Valve chamber in Kandamalawa, Komarangadawala in Trincomalee District. DNCWS/PRO/2021/CV/02/TR/02 | சி-7 மற்றும் மேற்பட்டது | 75,000 | 3,500 | | |
| | **Batticaloa District** | | | | | |
| 21. | Construction of 6m dia 8m depth rubble dug well in Kayankerny 211A, Koralaipattu North in Batticaloa District. DNCWS/PRO/2021/CV/02/BT/01 | சி-8மற்றும் மேற்பட்டது | 35,000 | 2,500 | | |
| 22. | Construction of 30$m^3$ capacity 12m height Ferro cement elevated tank, 3mx3m Pump House, Valve chamber in Vakanery 210, Koralaipattu South in Batticaloa District. DNCWS/PRO/2021/CV/02/BT/02 | சி-7 மற்றும் மேற்பட்டது | 55,000 | 3,500 | | |
| 23. | Construction of 60$m^3$capacity 12m height Ferro cement elevated tank, 3mx3m Pump House, Valve chamber in Veppaveduvan 186A, Erravurpattu in Batticaloa District. DNCWS/PRO/2021/CV/02/BT/03 | சி-7 மற்றும் மேற்பட்டது | 75,000 | 3,500 | | |
| 24. | Construction of 50$m^3$ capacity 12m height Ferro cement elevated tank, 3mx3m Pump House, Valve chamber in Periyapullumalai 146, Eravurpattu in Batticaloa District. DNCWS/PRO/2021/CV/02/BT/04 | சி-7 மற்றும் மேற்பட்டது | 70,000 | 3,500 | | |
| | **Puttalam District** | | | | | |
| 25. | Construction of 60$m^3$capacity 12 m height tank with plant room in Kaluchachchimulla, Dankotuwa in Puttalam District. DNCWS/PRO/2021CV/02/PU/14 | சி-7 மற்றும் மேற்பட்டது | 70,000 | 3,500 | | |
| | **Badulla District** | | | | | |
| 26. | Construction of Weir intake,20$m^3$ Ferro cement ground tank, retain wall 2.1m height, barbed wire fence and fixing gate in Seelathenna Haldumulla in Badulla District. DNCWS/PRO/2021/CV/02/BA/01 | சி-8மற்றும் மேற்பட்டது | 45,000 | 2,500 | | |
| 27. | Construction of Weir intake, 20$m^3$ Ferro cement ground tank, retain wall 2.1m height, barbed wire fence and fixing gate in Murutahinne, Haldumulla in Badulla District. DNCWS/PRO/2021/CV/02/BA/02 | சி-8மற்றும் மேற்பட்டது | 40,000 | 2,500 | | |
| 28. | Construction of Weir intake, 20$m^3$ Ferro cement ground tank, retain wall 2.1m height, barbed wire fence and fixing gate in Nikapotha West, Haldumulla in Badulla District. DNCWS/PRP/2021/CV/02/BA/03 | சி-8மற்றும் மேற்பட்டது | 40,000 | 2,500 | | |
| | **Ampara District** | | | | | |
| 29. | Construction of 40$m^3$ Ferro cement 12m height elevated tank in Thalapitioya Right, Padiyathalawa in Ampara District. DNCWS/PRO/2021/CV/02/AM/01 | சி-7 மற்றும் மேற்பட்டது | 55,000 | 3,500 | | |
| 30. | Construction of 60$m^3$ Ferro cement 12m height elevated tank in Marangala, Padiyiathalawa in Ampara District. DNCWS/PRO/2021/CV/02/AM/02 | சி-7 மற்றும் மேற்பட்டது | 65,000 | 3,500 | | |
| 31. | Construction of 40$m^3$ Ferro cement 12m height elevated tank in Thorathumbara, Padiyathalawa in Ampara District. DNCWS/PRO/2021/CV/02/AM/03 | | | | | |
| | **Monaragala District** | | | | | |
| 32. | Construction of 3mx3m Pump House, 100$m^3$ Ferro cement ground tank, retain wall 2.1m height, barbed wire fence and fixing gate in Guruhela, Monaragala in Moneragala District. DNCWS/PRO/2021/CV/02/MO/01 | சி-8மற்றும் மேற்பட்டது | 40,000 | 2,500 | | |
| | **Galle District** | | | | | |
| 33. | Construction of 6m dia 8m depth dug well, 2.5mx2.5m Pump House, 20$m^3$ Ferro cement ground tank, security fence, making fixing and furnishing gate in Udugama South, Nagoda in Galle District. DNCWS/PRO/2021/CV/0/GA/01 | சி-7 மற்றும் மேற்பட்டது | 80,000 | 3,500 | | |
| | **Kandy District** | | | | | |
| 34. | Construction of 30$m^3$ Ferro cement ground tank, pipe laying works in Bambarabedda East, Ududumbara in Kandy District. DNCWS/PRO/2021/CV/02/KA/01 | சி-6மற்றும் மேற்பட்டது | 100,000 | 3,500 | | |
| 35. | Construction of Roughing Filter (4$m^3$/h), pipe laying works in Baambarabedda West, Ududumbara in Kandy District. DNCWS/PRO/2021/CV/02/KA/02 | சி-8மற்றும் மேற்பட்டது | 40,000 | 2,500 | | |
| 36. | Pipe laying works in Pussella and Udahenthanna in Kandy District. DNCWS/Pro/2021/CV/02/KA/03 | சி-5மற்றும் மேற்பட்டது | 300,000 | 10,000 | | |
| 37. | Construction of 5m height flat form , concrete structure for weir, pipe laying works in Navangala School in Kandy District. DNCWS/PRO/2021/CV/02/KA/04 | சி-7 மற்றும் மேற்பட்டது | 80,000 | 3,500 | | |
| 38. | Pipe laying works in Kukulpenda in Kandy District. DNCWS/PRO/2021/CV/02/KA/05 | சி-8மற்றும் மேற்பட்டது | 30,000 | 2,500 | | |
| 39. | Construction of 40$m^3$ capacity Forro cement Ground Reservoir, Pipe laying works in Kaikawala in Kandy District. DNCWS/PRO/2021/CV/02/KA/06 | சி-6மற்றும் மேற்பட்டது | 100,000 | 3,500 | | |
| | **Kalutara District** | | | | | |
| 40. | Construction of Intake, 6$m^2$ roughing filter, 12.5m2 Slow sand filter, Chlorinator , Control Chamber, 15m3 Storage Tank in Kelinkanda, Palindanuwara in Kalutara District. DNCWS/PRO/2021/CV/02/KL/01 | சி-8மற்றும் மேற்பட்டது | 40,000 | 2,500 | | |
| 41. | Construction of Intake I, Intake II, 6m2 Roughing filter, 12.5m2 Slow sand Filter, Chlorinator, Control Chamber, 15$m^3$ Storage Tank in Addaragoda, Palinda nuwara in Kalutara District. DNCWS/PRO/2021/CV/02/KL/02 | சி-8மற்றும் மேற்பட்டது | 40,000 | 2,500 | | |
| 42. | Construction of Intake, 6m2 Roughing Filter, 15$m^3$ Storage Tank in Hedigalla, Palindanuwara in Kalutra District. DNCWS/PRO/2021/CV/02/KL/03 | சி-8மற்றும் மேற்பட்டது | 45,000 | 2,500 | | |
| 43. | Construction of Intake , 6m2 Roughing filter, 12.5m2 Slow sand Filter, Chlorinator, Control Chamber, 15$m^3$ Storage Tank in Ranepuragoda, Walallavita in Kalutara District. DNCWS/PRO/2021/CV/02/KL/04 | சி-8மற்றும் மேற்பட்டது | 40,000 | 2,500 | | |
| 44. | Construction of Intake , 6m2 Roughing filter, 12.5m2 Slow sand Filter, Chlorinator, Control Chamber, 15$m^3$ Storage Tank in Mandagala, Walallavita in Kalutara District. DNCWS/PRO/2021/CV/02/KL/05 | சி-8 மற்றும் மேற்பட்டது. | 40,000 | 2,500 | | |
| 45. | Construction of Intake, 6m2 Roughing Filter, Pump House, 20$m^3$ Storage Tank in Kelin Kanda Janapadaya, Palindanuwara in Kalutara District. DNCWS/PRO/2021/CV/02/KL/06 | சி-7 மற்றும் மேற்பட்டது | 60,000 | 3,500 | | |
| | Mannar District | | | | | |
| 46. | Construction of 60$m^3$ -12m height elevated tank, type 1 valve chamber in St.Joseph Rural Water Supply Society CBO, Achhankulam, Nanattan. DNCWS/PRO/2021/CV/01/MN/01 | சி-7 மற்றும் மேற்பட்டது | 70,000 | 3,500 | | |

**மேலேயுள்ள விடயம் தொடர்பான பொதுவான பணிப்புரைகள் மற்றும் நிபந்தனைகள்:**

**பணிப்புரைகள்:**

1. தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கு விண்ணப்பதாரியின் தலைப்புக் கடிதத்தில் சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான விண்ணப்பம் மற்றும் மீளளிக்கப்படாத கட்டணத்தின் பணவைப்புத் துண்டு ஆகியவற்றின் (பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல், கணக்கிலக்கம் : 0007040440 இலங்கை வங்கி) அடிப்படையிலேயே விலைமனுக் கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.
2. 2021 மே 31ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்கு மிடையில் விலைமனுக் கோரல் ஆவணங்களை கையேற்கலாம். (ஆவணங்களை கையேற்பதற்காக தொலைபேசி வழியாக சந்திப்பு முன்னேற்பாடொன்றை தயவுசெய்து மேற்கொள்ளவும்)
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை தேசிய சமூகநீர் வழங்கல் திணைக்களத்திடமிருந்து பெற்று சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்களை வழங்கும் இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2021 ஜூன் 3ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் திணைக்களத்தின் 2 ஆம் மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு தூதஞ்சல் சேவையூடாக (courier service) அனுப்பப்படலாம்.
5. 2021.05.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு திணைக்களத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
6. அனைத்து விலைமனுக்களும் 2021 ஜூன் 3 ஆம் திகதியன்று மு.ப. 10.15 மணிக்கு அதே முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
7. விலைமனுப்பிணையானது பணிப்பாளர் நாயகம், தேசிய சமூகநீர் வழங்கல் திணைக்களம், இல.: 1114, பன்னிப்பிட்டியவீதி, தளவத்துகொட என்று முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய சமூகநீர் வழங்கல் திணைக்களம்,**
**இல.: 1114, பன்னிப்பிட்டியவீதி, தளவத்துகொட.**
**06.05.2021.**

# ராமநவமியை வீட்டிலேயே கொண்டாடுவது எப்படி?

மகாவிஷ்ணுவின் தசாவதாரங்களில் இந்த ராம அவதாரம் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது. மனிதர்களாக பிறந்த ஒவ்வொருவரும் இந்த பூமியில் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு உதாரணமாக வாழ்ந்தவர் தான் அந்த ராமபிரான். தர்மத்தின் வழியில் சென்று அதர்மத்தை எப்படி அழிப்பது, ஒரு நாட்டை ஆளக் கூடிய அரசன் எப்படி இருக்க வேண்டும், பெரியவர்களை எப்படி மதிக்க வேண்டும், உடன் பிறந்தவர்களை எப்படி மதிக்க வேண்டும், கட்டிய மனைவியை எப்படி நடத்த வேண்டும், எதிரியை கூட எப்படி நண்பனாக பார்க்க வேண்டும், இப்படியாக இந்த பூமியில் ஒரு மனிதன் எப்படி நல்ல மனிதனாக வாழ்வது என்பதை, நான் இராமபிரானிடம் இருந்துதான் கற்றுக் கொள்ள வேண்டும்.



இவ்வளவு சிறப்புகளை கொண்ட ராமபிரான் அவதரித்த தினத்தை தான் ராம நவமியாக கொண்டாடுகின்றோம். இந்த வருடம் ராமநவமி ஏப்ரல் 21ஆம் திகதி, சித்திரை 9 ஆம் நாள் வருகின்றது. ராமநவமி அன்று ராமர் கோயில்களில் ராமருக்கு பட்டாபிஷேகம், ராமர் திருமணம் என்று கோலாகலமாக திருவிழாக்கள் கொண்டாடப்படும்.

வீட்டிலேயே ராமநவமி பண்டிகையை எப்படி கொண்டாடுவது? எந்த ஒரு பண்டிகையை வீட்டில் கொண்டாட வேண்டும் என்றாலும் முதலில் வீட்டையும் பூஜை அறையை சுத்தம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். அதிகாலையிலேயே எழுந்து சுத்தமாக குளித்துவிட்டு, வீட்டில் ராமரின் பட்டாபிஷேக படம் இருந்தால் அதை பூஜைக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். அப்படி இல்லை என்றால் அனுமனின் படத்தை பூஜைக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். எதுவுமே இல்லை என்றால் பெருமாளின் படத்திற்கு துளசி இலைகளால் அலங்காரம் செய்து வாசனை மிகுந்த பூக்களைச் சூட்டி பூஜைக்கு தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள்.

பூஜை அறையை அலங்காரம் செய்து முடித்துவிட்டு ஒரு தீபத்தை ஏற்றி வைத்துவிட்டு, ராமருக்கு பிடித்த பால் பாயாசத்தை ராமநவமி அன்று நிவேதனமாக செய்து வைக்க வேண்டும். கட்டாயம் ஒரு டம்ளரில் பானகம் தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள். அடுத்தபடியாக பூஜை அறையில் அமர்ந்து உங்களுடைய வேண்டுதலை மனதார ராமபிரானிடம் சொல்லி 'ஸ்ரீ ராம ஜெயம்' மந்திரத்தை 108 முறை உச்சரிக்க வேண்டும். 108 முறைக்கும் மேல் எத்தனை முறை உச்சரித்தாலும் தவறு கிடையாது. வெறும் மூன்று முறை உச்சரித்தாலும் தவறில்லை.

இந்த ராம நவமி பூஜையை காலை 6.00 மணியிலிருந்து 8.00 மணிக்குள் செய்துவிட்டு அதன் பின்பு உபவாசத்தை தொடங்கலாம். அப்படி காலை நேரத்தில் பூஜை செய்ய முடியாதவர்கள் காலையிலிருந்து உபவாசம் இருந்து மாலை 5.00 மணியிலிருந்து 7.30 மணிக்குள் இந்த பூஜையை செய்து அதன் பின்பு விரதத்தை நிறைவு செய்து கொள்ள வேண்டும். ராம நவமி தினத்தன்று உணவு சாப்பிடாமல் உபவாசம் இருந்து விரதம் இருக்க முடியும் என்று நினைப்பவர்கள் தாராளமாக விரதத்தை மேற்கொள்ளலாம்

உடல்நிலை சரியில்லாதவர்கள் பால் பழம் சாப்பிட்டும் இந்த விரதத்தை மேற்கொள்ளலாம். மாலை உங்கள் வீட்டில் ராமருக்கு பூஜை செய்து வழிபாட்டை முடித்து விட்டு, அதன் பின்பு இறைவனுக்கு நிவேதனமாக வைத்த பிரசாதத்தை முதலில் சாப்பிட்டு விரதத்தை முடித்துக் கொள்ளுங்கள்.




## மானுடவியல்
(தொடர்)

### அமர்நீதிநாயனார்




சோழநாட்டிலே, பழையாறை என்னும் ஊரிலே, வைசியர் குலத்திலே, பெருஞ்செல்வ முடையவரும் சிவனடியார்களைத் திருவமுது, செய்வித்து அவரவர் குறிப்பறிந்து கந்தை கீள்கோவணம் என்பவைகளைக் கொடுப்பவருமாகிய அமர்நீதிநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருநல்லூர் என்னுஞ் சிவஸ்தலத்திலே மகோற்சவதரிசனஞ் செய்ய வருஞ் சிவனடியார்கள் திருவமுது செய்யும் பொருட்டு ஒரு திருமடம் கட்டுவித்துக் கொண்டு, தம்முடைய சுற்றத்தார்களோடும் அவ்விடத்திற் போய்ச் சேர்ந்து, மகோற்சவ தரிசனஞ்செய்து, தம்முடைய மடத்திலே சிவனடியார்களைத் திருவமுது செய்வித்துகொண்டு, மன மகிழ்ச்சியோடும் இருந்தார்.

இருக்கும் நாட்களிலே, ஒருநாள், சிவபெருமான் பிராமண வருணத்துப் பிரமசாரி வடிவங்கொண்டு, இரண்டு கௌபீனங்களையும் விபூதிப்பையையும் கட்டியிருக்கின்ற ஒரு தண்டைக் கையிலே பிடித்துக்கொண்டு அந்தத் திருமடத்திற்கு எழுந்தருளி வந்தார். அதுகண்ட அமர்நீதிநாயனார் மனமகிழ்ச்சியோடும் முகமலர்ச்சியோடும் அவரை எதிர்கொண்டு வணங்கி, "சுவாமீ! தேவரீர் இங்கே எழுந்தருளிவருவதற்கு அடியேன் பூர்வத்தில் யாது தவஞ்செய்தேனோ" என்று இன்சொற் சொல்ல கூறினார்.பிரமசாரியானவர் அவரை நோக்கி, "நீர் அடியார்களைத் திருவமுது செய்வித்து அவர்களுக்கு வஸ்திரங்களும் கந்தைகளும் கொடுக்கின்றீர் என்பதைக் கேள்வியுற்று, உம்மைக் காணுதற்கு விரும்பி வந்தோம்" என்றார் ஈசன். அதுகேட்ட அமர்நீதிநாயனார் "இந்தத் திருமடத்திலே பிராமணர்கள் போசனம் பண்ணும்பொருட்டுப் பிராமணர்கள் பாகம் பண்ணுவதும் உண்டு. தேவரீரும் இங்கே திருவமுது செய்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

பிரமசாரியானவர் அதற்கு உடன்பட்டு, நாம் காவேரியிலே ஸ்நானம் பண்ணிக்கொண்டு வருவோம். 'மழைவரினும் தரித்துக் கொள்ளும்பொருட்டுநீர்இந்தஉலர்ந்த கௌபீனத்தைவைத்திருந்து தாரும்" என்று சொல்லி, தண்டிலே கட்டப்பட்டிருக்கின்ற இரண்டு கௌபீனங்களில் ஒன்றை அவிழ்த்து, "இந்தக் கௌபீனத்தின் மகிமையை உமக்கு நான் சொல்லவேண்டுவதில்லை. நான் ஸ்நானம்பண்ணிக் கொண்டு வரும்வரைக்கும் நீர் இதை வைத்திருந்து தாரும்" என்று ஈசன் பெருமான் கொடுத்து விட்டு, காவேரியிலே ஸ்நானம் செய்வதர்க்கு செல்கிறார்.

அமர்நீதிநாயனார் அந்தக் கௌபீனத்தை ஒரு தகுந்த இடத்திலே சேமித்து வைத்தார்.ஸ்நானம்பண்ணப் போன பிரமசாரியாக வேடம் கொண்ட ஈசன் அமர்நீதிநாயனார் சேமித்து வைத்த கௌபீனத்தை அது வைக்கப்பட்ட ஸ்தானத்தினின்றும் நீக்கும்படி (மறையும்) செய்து, ஸ்நானஞ்செய்து கொண்டு, மழை பொழிய நனைந்து திருமடத்தை அடைந்தார்.

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

## ஹம்ஸ யோகம் - 20



ஸோஹம் சாதனையில் ஏற்கனவே முன்னர் கூறப்பட்டதைப் போல் மந்திரத்தின் நாதமாகிய ஸோஹம் என்பது ஒவ்வொரு மூச்சிலும் உணர்வதும் வாயால் ஜெபிக்காமல் எமது அகச்செவியில் கேட்கும் ஆற்றலைப் பெறுவதுமாகும். இதனாலேயே இது அஜபா ஜெபம் எனப்படுகிறது. இந்த ஜெபம் சாதகனில் தொடர்ச்சியாக நடைபெறும் போது, இது மகா பிராணன் எனப்படும் எங்கும் நிறைந்த பிராண சமுத்திரத்தில் இருந்து பிராணனை அதிகமாக ஈர்க்கத் தொடங்குகிறது. இதை பிராண காயத்ரி சாதனை என்று சொல்லப்படும்.

ஒரு சாதகன் தன்னுணர்வுடன், தொடர்ச்சியாக ஒவ்வொரு மூச்சுடனும் அஜபா சாதனையை செய்யும் ஆற்றல் பெறுவானாக இருந்தால் அவனிற்கு எந்தவித மேலதிக முயற்சியும் இன்றி அவனது பிராணன் முழுமையாக பாதுகாக்கப்படுவதுடன் முழுமையான ஆன்ம அறிவினையும், யோக சாதனையால் பெறப்படும் அனைத்து சித்திகளையும் பெறுவான். இப்படிப்பட்ட ஆற்றலுள்ள சாதனையை சங்கல்பத்துடனும், சிரத்தையுடனும், யோக ஒழுக்கத்துடனும் ஒரு சாதகன் செய்து வந்தால் அது எத்தகைய ஓர் உயர்ந்த சாதனையாக இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

இந்த ஸோஹம் சாதனை நிச்சயமாக மிக உயர்ந்த ஆன்ம சாதனை என்பதில் ஐயமில்லை. ஏனென்றால் காயத்ரி வித்யாவிற்கு மேலான அறிவியலோ, தத்துவமோ ஆன்மீகத்தில் இல்லை. அதுபோல் ஜெபங்களில் காயத்ரி ஜெபத்திற்கு மேலான ஜெபம் என்று எதுவுமில்லை. ஆகவே இந்த ஆற்றலை உணர வைக்கும் ஸோஹம் சாதனையினை அனைத்து சாத்திரங்களும் மிக உயரிய நிலையில் வைத்துப் போற்றுகின்றன.

தேவிபாகவத்தில் உள்ள கீழ்வரும் சுலோகம் ஹம்ஸ யோகத்தின் இரகசியார்த்தத்தினை விளக்குகிறது. இது அனைத்து தெய்வீக உபாசனையின் தத்துவத்தினையும் விளக்குகிறது. ஹம்ஸ யோகம் பிரம்மா, விஷ்ணு, சிவன், கணபதி ஆகிய நால்வரது ஆற்றலினையும் ஆகர்ஷிக்கிறது, ஹம்ஸமே உண்மை வழிகாட்டி, ஹம்ஸமே ஜீவன், ஹம்ஸமே பிரம்மன்! ஆன்மாவினது வடிவமும், எல்லையற்ற ஆற்றலுடைய பிரம்மத்தினது வெளிப்பாடு ஹம்ஸமே!

உயிரானது தொடர்ச்சியாக அஜபா ஜெபத்தினை சித்தத்தில் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது, காயத்ரியின் ஆற்றல் ஸகார நாதமாகவும், அதன் மறுதலைச் சக்தியான ஹகார நாதமும் உயிரின் தொடர்ச்சியான நாதமாக மூச்சில் வெளிப்படுகிறது. இதுபற்றி சாரதா திலக தந்திரம் தெளிவாகக் கூறுகிறது. **(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்



கொழும்பு மாநகரில் மிக உயரமான விமான கோபுரத்தைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் கொழும்பு– 13 புதுச் செட்டித்தெரு ஸ்ரீ ஸ்ரீ இராதாகிருஷ்ணர் ஆலயத்தின் அழகிய தோற்றத்தைப் படத்தில் காணலாம். (படம்: வடகொழும்பு தினகரன் நிருபர்)

## பொறாமையினால் ஏற்படும் துன்பம்

பாண்டுவின் மனைவியர்களான குந்தி, மாதுரி இருவரும் ஐந்து பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். தனது ஓரகத்திகளுக்குப் பிள்ளைப் பேறு உண்டாகியும், தனக்கு உண்டாகாததை எண்ணி பொறாமை கொண்ட பாண்டுவின் அண்ணன் மனைவியான காந்தாரி ஓர் உலக்கையால் வயிற்றில் அடித்துக் கொண்டாள். சில நாள்களில் கர்ப்பமான காந்தாரி ஒரு மாமிசப் பிண்டத்தைப் பெற்று எடுத்தாள்!

வியாச முனிவர் அதை நூறு பிள்ளைகளாகவும், ஒரு பெண்ணாகவும் மாற்றினார். அதாவது, காந்தாரியின் பொறாமை நூறு பிள்ளைகளாகவும் பெண்ணாகவும் உருவெடுத்தது. பொறாமையே மனித உருவாகப் பிறந்ததனால், அவர்களில் மூத்தவனான துரியோதனன் பாண்டவர்களின் வீரம், புகழ் ஆகியவற்றைக் கண்டு பொறாமை கொண்டான். குறிப்பாக, நிகரற்ற உடல் பலம் கொண்டிருந்த பீமனைக் கண்டு மிக அதிகமாகப் பொறாமைப் பட்டான்.

அதன் விளைவாக, ஒருநாள் துரியோதனன் தன் சகோதரர்களுடன் சேர்ந்து பீமனுக்கு விஷமளித்து, அவனை நாகப் பாம்புகள் நிறைந்த ஆற்றினில் தூக்கி வீசினர். நாகங்கள் அவனைத் தீண்ட, அவற்றின் விஷம், ஏற்கெனவே துரியோதனன் அளித்த விஷத்தை முறியடித்து விட்டது. ஆற்றில் மூழ்கிய பீமன் ஆற்றின் அடியிலிருந்த நாகலோகத்தை அடைந்தான். நாகராஜா அவனை வரவேற்று உபசரித்து, ஆயிரம் யானைகளின் பலத்தை அவனுக்கு அளித்தான்.

உயிர் பிழைத்து வந்த பீமனைக் கண்டு, துரியோதனின் பொறாமை பல மடங்கு பெருகியது. பாண்டவர்களில் மூத்தவரான யுதிஷ்டிரருக்கு சூதாட்டத்தில் ஆசை உண்டு. அதைப் பயன்படுத்திக் கொண்டு அவரை சூதாட்டத்தில் தோற்கடித்த துரியோதனன், பாண்டவர்களை பதின்மூன்று ஆண்டுகளுக்கு நாடு கடத்துகிறான்.

பதின்மூன்று ஆண்டுகள் வனவாசத்திற்குப் பிறகும், பாண்டவர்களின் உரிமையை துரியோதனன் தர விரும்பாததால், பாரதப் போர் நிகழ்கிறது. மொத்தத்தில், துரியோதனுடைய பொறாமையினால் மற்றவர்களுக்குத் துன்பமும், இறப்பும் உண்டாகிறது.

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

***18345) முருகனின் திருவுருவங்கள் எத்தனை?*** *16*

***18346) அந்த 16 திருவுருவங்களும் எவை?***

*1, சக்திதரர், 2. கந்த சுவாமி, 3. தேவ சேனாதிபதி, 4. சுப்பிரமணியர், 5. கஜ வாகனர், 6. சரவணபவர், 7. கார்த்திகேயர், 8. குமாரசுவாமி, 9. சண்முகர், 10. தாரகாரி, 11. சேனாபதி, 12. பிரமசாத்தர், 13. வள்ளி கல்யாண சுந்தரர், 14. பாலசுவாமி, 16. கிரவுஞ்ச பதனர், 16. சிகிவாகனர் எனப்படும்.*

***18347) முருகன் அழித்த ஆறு பகைவர்கள் யார்?***

*ஆணவம், கன்மம், குரோதம், லோபம், மதம், மாற்சர்யம்.*

***18348) முருகப்பெருமான் போர் புரிந்து அசுரர்களை அழித்த இடங்கள் எத்தனை?***

*மூன்றாகும்.*

***18349) அந்த மூன்று இடங்களும் எவை?*** *திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், போரூர்*

***18350) முருகப்பெருமான் சூரபத்மனை வதம் செய்தது எங்கு?***

*திருச்செந்தூர்*

***18351) தாரகாசுரனை வதம் செய்தது எங்கு?***

*திருப்பரங்குன்றம்,*

***18352) சூரபத்மன், தாரகாசுரன் ஆகிய இருவரின் சகோதரர் யார்?***

*சிங்க முகாசுரன்*

***18353) சிங்க முகாசுரனை வதம் செய்தது இடம் எங்கு?***

*போரூர்*

***18354) முருகப்பெருமானின் வலப்புறம் உள்ள ஆறு கரங்களில் உள்ளவை எவை?*** *ஆயுதங்கள்*

***18355) முருகப்பெருமானின் வலப்புறத்தில் ஆயுதங்கள் எவை?***

*அபயகரம், கோழிக்கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல்*

***18356) இடப்புறம் உள்ள ஆறு கரங்களில் என்னென்ன இருக்கிறது?***

*வரமளிக்கும் கை, தாமரை, மணி, மழு, தண்டாயுதம், வில் போன்றவை.*

***18357) முருகப் பெருமானை வணங்க உகந்த நாட்கள் எவை?***

*திதி, சஷ்டி, விசாகம், கார்த்திகை, திங்கள், செவ்வாய்,*

***18358) முருகன் யாரால் தாங்கப்பட்டான்?***

*கங்கையால்*

***18359) கங்கையால் தாக்கப்பட்டதால் முருகனுக்கு ஏற்பட்ட பெயர் என்ன?***

*காங்கேயன்*

***18360) சரவணப் பொய்கையில் உதித்ததால் வந்த பெயர் என்ன?***

*சரவண பவன்*

***18361) கார்த்திகை பெண்களால் வளர்க்கப்பட்டதால் வந்த பெயர் என்ன?***

*கார்த்திகேயன்*

***18362) சக்தியினால் ஆறு உருவமும் ஓர் உருவமாக ஆக்கப்பட்டதால் வந்த பெயர் என்ன?*** *கந்தன்*

***18363) சண் முகப் பெருமானின் வாசஸ்தலம் எது?*** *குமரக்கோட்டம்*

***18364) குமரக்கோட்டம் எங்கே உள்ளது?***

*காஞ்சீபுரத்தில்*

***18365) கந்தப் பெருமானின் புகழ் சொல்லும் நூல் எது?*** *திருப்புகழ்*

***18366) திருப்புகழ் நூலினை இயற்றியவர் யார்?***

*அருண கிரிநாதர்.*

***18367) முத்தமிழால் வைதாரையும், வாழ வைப்பான் முருகன் என்று யார் பாடியுள்ளார்?***

*அருட்கவி அருணகிரி*

***18368) அக்கினி, இந்திரன், வருணன், பிரகஸ்பதி, ஹிரண்ய கர்ப்பம் ஆகியோரின் கூட்டுக் கலவை யார்?***

*முருகன் ஆவான்.*

***18369) முருகனைக் குறித்துக் குமார சம்பவம் என்கிற பெயரில் காவியம் இயற்றியவர் யார்?***

*மகாகவி களிதாசர்.*

***18370) யானை மேல் வீற்றிருக்கும் முருகன் உருவம் எங்கே செதுக்கப்பட்டுள்ளது?***

*மாமல்லபுரத்துப் பாறைகளில்*

***18371) முருகனின் கையில் உள்ள வேல் என்னவென்று பெயர் பெறும்?***

*இறைவனின் ஞானசக்தி என*

***18372) பிரமசரியகிருகஸ்தசந்நியாசக் கோலங்களில் யாரை காணலாம்?***

*முருகனை*

***18373) பிற கடவுள்களுக்கு இல்லாத சிறப்பு ஒன்று முருகப்பெருமானுக்கு உண்டு. அது எது.?***

*பிரமசரியகிருகஸ்தசந்நியாசக் கோலங்களில் முருகனை மட்டுமே காண முடியும்.*

# சர்வதேச செய்திகள்

## ஜெரூசலத்தில் இரண்டாவது இரவாக கடும் மோதல்: 90 பலஸ்தீனர் காயம்



ஜெரூசலம் நகரின் பலஸ்தீனர்கள் மற்றும் இஸ்ரேலிய பொலிஸாருக்கு இடையே கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற புதிய மோதல்களில் பலரும் காயமடைந்துள்ளனர்.

பழைய நகரின் டமஸ்கஸ் வாயிலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸார் மீது கற்களை எறிந்து தாக்குதலில் ஈடுபட்டனர். மறுபுறம் பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது அதிர்ச்சி அளிக்கும் கையெறி குண்டுகள், ரப்பர் குண்டுகளால் சூடு நடத்தியதோடு தண்ணீரைப் பீச்சடித்தனர்.

இதன்போது 90 பலஸ்தீனர்கள் காயமடைந்ததாக பலஸ்தீன மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அதேபோன்று ஒரு அதிகாரி காயமடைந்ததாக இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜெரூசலத்தில் யூதக் குடியேறிகள் உரிமை கோரும் நிலத்தில் இருந்து பலஸ்தீனர்களை வெளியேற்றும் முயற்சி இடம்பெறும் நிலையிலேயே இந்த பதற்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

இதில் முஸ்லிம்களின் ரமலான் மாதத்தின் புனித இரவான லைலதுல் கதிர் இரவில் ஆயிரக்கணக்கான வழிபாட்டாளர்கள் டமஸ்கஸ் வாயிலில் ஒன்றுகூடிய சூழலிலேயே கடந்த சனிக்கிழமை இரவு மோதல் வெடித்தது.

'அவர்கள் நாம் தொழுவதை விரும்புவதில்லை. அங்கு எந்நாளும் மோதல் வெடிக்கிறது. எந்நாளும் பிரச்சினையாக உள்ளது' என்று 27 வயதான மஹ்மூத் அல் மர்பு ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

அல் அக்ஸா பள்ளிவாசலுக்கு அருகே கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோதலில் 200க்கும் அதிகமான பலஸ்தீனர்களும் 17 இஸ்ரேலிய பொலிஸாரும் காயமடைந்ததாக அவசர பணியாளர்கள் மற்றும் இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்தனர்.

ஜெரூசலம் அல் அக்ஸா பள்ளிவாசல் முஸ்லிம்களின் புனிதத் தலங்களில் ஒன்றாகும். ஆனால் டெம்பிள் மௌண்டன் என்று அழைக்கப்படும் அந்தப் பகுதி யூதர்களின் புனிதத் தலமாகவும் உள்ளது. இங்கு தொடர்ச்சியான மோதல்கள் இடம்பெறுகின்றபோதும் கடந்த பல ஆண்டுகளில் இடம்பெற்ற மோசமான சம்பவமாக தற்போதைய மோதல் உள்ளது.

இங்கு வன்முறை அதிகரித்திருப்பது குறித்து மத்திய கிழக்கு பேச்சுவார்த்தையாளர்கள், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா மற்றும் ஐ.நா கவலை வெளியிட்டுள்ளன.

இதேநேரம் ஹமாஸ் அமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கும் காசா பகுதியில் இருந்து கடந்த சனிக்கிழமை இஸ்ரேலை நோக்கி ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

'இதற்கு பதில் நடவடிக்கையாக எமது போர் விமானங்கள் தெற்கு காசாவில் ஹமாஸ் இராணுவ முகாம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியது' என்று இஸ்ரேல் பாதுகாப்பு படை ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளது.

1967 மத்திய கிழக்கு போர் தொடக்கம் கிழக்கு ஜெரூசலம் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பில் உள்ளது. ஜெரூசலம் முழுவதையும் தமது தலைநகராக இஸ்ரேல் அறிவித்தபோதும் அதிகப் பெரும்பான்மையான சர்வதேச சமூகம் அதனை அங்கீகரிக்கவில்லை.

இந்நிலையில் கிழக்கு ஜெரூசலத்தின் செய்க் ஜெர்ரா மாவட்டத்தைச் சேர்ந்த பலஸ்தீன குடும்பங்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு இஸ்ரேல் முயற்சிப்பதே அண்மைய பதற்றம் அதிகரிப்பதற்கு காரணமாகும்.

இந்த முயற்சியை இஸ்ரேல் கைவிட வேண்டும் என்று ஐ.நா வலிறுயுத்துவதோடு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக பலப்பிரயோகத்தை பயன்படுத்துவதில் கட்டுப்பாட்டை பேண வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

வலுக்கட்டாயமான வெியியேற்றத்தை தடுக்க சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என்று அரபு லீக் நாடுகள் அழைப்பு விடுத்துள்ளன.

இது தொடர்பில் நீண்ட காலமாக நீடிக்கும் சட்டப் பிரச்சினை குறித்து இஸ்ரேலிய உச்ச நீதிமன்றம் இன்று விசாரணை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பூமியின் அச்சம் நீங்கியது:

## சீன ரொக்கெட் பாகங்கள் இந்திய கடலில் விழுந்தன



கட்டுப்பாட்டை இழந்து பூமியின் வளிமண்டலத்திற்கு திரும்பிய சீனாவின் இராட்சத ரொக்கெட் சிதைவுண்டு இந்திய பெருங்கடல் பகுதியில் விழுந்ததாக சீனா தெரிவித்துள்ளது.

பூமிக்கு திரும்பும்போது இந்த ரொக்கெட்டின் பெரும்பகுதி அழிந்த நிலையில் எஞ்சிய பாகங்களே கடலில் விழுந்திருப்பதாக சீனாவின் அரச ஊடகம் நேற்று செய்தி வெளியிட்டது. அதன் பாகங்கள் மாலைதீவுக்கு மேற்காகவே விழுந்துள்ளன.

கட்டுப்பாட்டை இழந்த லோங் மார்ச்5பி என்ற இந்த வாகனம் விழுந்த இடம் பற்றி அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவும் கண்காணித்து வருகிறது.

பீஜிங் நேரப்படி நேற்று ஞாயிற்றுக் கிழமை 10.24 மணி அளவிலேயே இந்த ரொக்கெட் பூமியை நோக்கி விழுந்ததாக சீன அரச ஊடகம் தெரிவித்தது.

'அரேபிய தீபகற்பத்திற்கு மேலால் லோங் மார்ச்5பி ரொக்கெட் பூமியின் வளிமண்டலத்திற்கு மீண்டும் திரும்பியது உறுதி செய்யப்பட்டது' என்று அமெரிக்க விண்வெளி கட்டளையகம் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டது.

இந்த ரொக்கெட் பூமியை நோக்கி வரும் நிலையில் அதன் பாகங்கள் மக்கள் வாழும் பகுதியில் விழும் அச்சம் இருந்து வந்தது. பூமியின் சுற்றுவட்டப்பாதையில் இருந்து ரொக்கெட்டை பூமியை நோக்கி விழுவதற்கு விடுவதில் சீனா அலட்சியமாக இருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்டிக் சாடி இருந்தார்.

எனினும் இந்த ரொக்கெட் பாகம் ஒன்று ஒருவரின் மீது விழுவதற்கான சாத்தியம் மிகக் குறைவானது என்று நிபுணர்கள் குறிப்பிட்டிருந்தனர். உலகின் பெரும் பகுதி கடல் மற்றும் மனிதர் வாழாத நிலங்களாக இருப்பதே இதற்கு காரணமாகும்.

சீனா தயாரிக்கும் விண்வெளி நிலையத்திற்கான முக்கிய பாகங்களை எடுத்துக் கொண்டே இந்த ரொக்கெட் கடந்த மாதம் விண்வெளிக்குச் சென்றது.

18 தொன் கொண்ட இந்த ரொக்கெட், கடந்த பல தசாப்தங்களில் கட்டுப்பாட்டை இழந்து பூமிக்கு விழும் மிகப் பெரிய பொருளாக இருந்தது.

இந்த பொருளின் பயணப் பாதையை கண்காணித்து வருவதாகவும் அதனை சுட்டுவீழ்த்த திட்டம் இல்லை என்றும் அமெரிக்கா கடந்த வாரம் கூறி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதைப்போன்ற ஒரு ரொக்கெட் பாகம் ஓராண்டுக்கு முன் புவியில் விழுந்தபோது, அதன் குழாய் அமைப்பு என்று சந்தேகிக்கப்படும் பொருள் ஒன்று ஆபிரிக்காவின் ஐவரி கோஸ்ட்டில் கண்டறியப்பட்டது.

இந்த ரொக்கெட் பாகம் விழுவதால் ஏற்பட வாய்ப்புள்ள ஆபத்து தொடர்பாக மேற்கத்திய ஊடகங்களில் வெளியான செய்திகளை மிகைப்படுத்தப்பட்டவை என்று விமர்சித்த சீன ஊடகம், ஏதோ ஒரு பெருங்கடற் பரப்பில் இந்த சிதைவுகள் விழும் என்று கூறியது.

### சீனாவின் சீனோபார்ம் தடுப்பூசி:

## உலக சுகாதார அமைப்பு அனுமதி



சீன அரசுக்கு சொந்தமான சீனோபார்ம் நிறுவனம் தயாரித்த கொவிட்19 தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு அவசர காலப் பயன்பாட்டு அனுமதி வழங்கியுள்ளது.

மேற்கத்திய நாடு ஒன்றால் தயாரிக்கப்படாத தடுப்பூசி ஒன்று உலக சுகாதார அமைப்பின் அங்கீகாரத்தை பெறுவது இதுவே முதல் முறையாகும். சீனாவிலும் வேறு சில உலக நாடுகளிலும் இந்த தடுப்பூசி ஏற்கனவே கோடிக்கணக்கான மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக பைசர், அஸ்ட்ராசெனிக்கா, ஜோன்சன் அன்ட் ஜோன்சன் மற்றும் மொடர்னா ஆகிய தடுப்பூசிகளின் பயன்பாட்டுக்கு மட்டுமே உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளித்திருந்தது.

ஆனால் பல நாடுகளில், குறிப்பாக ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, ஆசியா போன்ற பகுதிகளில் உள்ள சில ஏழை நாடுகளில் மருத்துவ ஒழுங்காற்று அமைப்புகள் சீனோபார்ம் தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டுக்கு அனுமதி வழங்கியிருந்தன.

முன்னதாக குறைவான தரவுகளே சர்வதேச அளவில் வழங்கப்பட்டு இருந்ததால் சீன தடுப்பூசியின் செயல்வீரியம் நீண்டகாலமாக உறுதியாகத் தெரியாமலே இருந்தது.

சீனோபார்ம் நிறுவனம் தயாரித்த தடுப்பூசியின் பாதுகாப்பு, செயல் வீரியம் மற்றும் தரம் ஆகியவற்றை தாங்கள் பரிசோதித்து கண்டறிந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

18 அல்லது அதற்கு அதிகமான வயதுடையவர்களுக்கு இந்த தடுப்பூசியை இரண்டு டோஸ்களாக வழங்கவும் உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்துள்ளது.

## காபுல் நகர பாடசாலைக்கு அருகே குண்டு வெடிப்பு: 58 பேர் உயிரிழப்பு



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலின் பாடசாலை ஒன்றுக்கு அருகில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 58 ஆக அதிகரித்திருப்பதோடு காயமடைந்த குறைந்தது 150 பேருக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதில் மருத்துவர்கள் போராடி வருகின்றனர்.

ஷியா முஸ்லிம்கள் வாழும் டாஷ்டே பார்கி பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இந்த குண்டு வெடிப்பு அந்தப் பகுதியை அதிரச் செய்தது. ஆப்கானின் மதச் சிறுபான்மையினராக இருந்த இந்த சமூகத்தை இலக்கு வைத்து கடந்த காலங்களில் இஸ்லாமிய அரசுக் குழு மற்றும் சுன்னி முஸ்லிம் போராட்டக் குழுக்கள் தாக்குதல் நடத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கார் குண்டு மற்றும் அந்தப் பகுதியில் வைக்கப்பட்ட இரு குண்டுகளால் இந்த வெடிப்புகள் இடம்பெற்றிருப்பதாக நம்பபப்படுகிறது.

இதில் கற்றலை முடித்து விட்டு வீடு திரும்பும் ஏழு அல்லது எட்டு சிறுமிகள் கொல்லப்பட்டவர்களில் இருப்பதாக பார்த்தவர் ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

அதேபோன்று இந்தத் தாக்குதலில் பல பெண்களும் பாதிக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆப்கான் ஜனாதிபதி அஷ்ரப் கானி இந்தத் தாக்குதலுக்கு தலிபான்கள் மீது குற்றம்சாட்டியபோதும், இதில் தமக்கு தொடர்பு இல்லை என்று தலிபான் பேச்சாளர் மறுத்திருப்பதோடு ஆப்கான் பொதுமக்கள் மீதான எந்த ஒரு தாக்குதலையும் அந்த அமைப்பு கண்டித்துள்ளது.

தற்போதை போர் மற்றும் வன்முறையை தடுக்க தவறி இருப்பது குறித்து ஆப்கான் அரசு மற்றும் மேற்குலக சக்திகள் மீது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் குற்றம்சுமத்தியுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களை அடக்கம் செய்வதற்காக நேற்றைய தினத்திலும் பிரேத அறையில் இருந்து உடல்கள் பெறப்பட்டு வரும் அதேநேரம், சில குடும்பத்தினர் காணாமல்போனவர்களை தொடர்ந்து தேடி வருகின்றனர்.

ஆப்கானில் வன்முறைகள் அதிகரித்திருக்கும் சூழலில் வரும் செப்டெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்க துருப்புகள் ஆப்கானில் இருந்து முழுமையாக வெளியேறும் அறிவிப்பை வெளியிட்டிருக்கும் நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவின் அண்டை நாடுகளில் கொரோனா வைரஸ் பரவல் உச்சம்



இந்தியாவில் கொரோனா தொற்று தீவிரம் அடைந்து அதனை கட்டுப்படுத்த போராடி வரும் நிலையில் அண்டைய நாடுகளிலும் நோய்த் தொற்று அதிகரித்து வருகிறது.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் இந்தியாவில் தினசரி நோய்த் தொற்று மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கை கட்டுக்கடங்காது அதிகரித்து வருகிறது. இந்த சூழலில் இந்தியாவின் நெருங்கிய அண்டை நாடுகளிலும் நிலைமை மோசமடைந்து வருகிறது.

இதில் நோபாளம் மீதான கவலை அதிகரித்துள்ளது. அங்கு ஏப்ரல் மாதம் தொடக்கம் நோய்த் தொற்று வேகமாக உயர்ந்து கொரோனா சோதனைக்கு உள்ளாகுபவர்களில் 40 வீதமானவர்களுக்கு வைரஸ் தொற்றி இருப்பது அடையாளம் காணப்பட்டு வருகிறது.

நேபாளம் இந்தியாவுடன் 1,880 கிலோமீற்றர் நில எல்லையை பகிர்ந்துகொள்ளும் நிலையில் இரு நாட்டு மக்களும் வர்த்தகம், சுற்றுலா மற்றும் குடும்ப காரணங்களுக்காக கட்டுப்பாடுகள் இன்றி எல்லையை கடந்து வருகின்றனர்.

இந்தியா சென்று திரும்பிய நேபாளத்தின் முன்னாள் மன்னர் கயனேந்திராவுக்கும் நோய்த் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பங்களாதேஷிலும் கடந்த மார்ச் ஆரம்பம் தொடக்கம் நோய்த் தொற்று அதிகரித்து வருகிறது. அங்கு ஏப்ரல் 6 ஆம் திகதி தொடக்கம் தேசிய அளவில் பொது முடக்கம் அமுல்படுத்தப்பட்ட நிலையில் அது வரும் மே மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிலும் நோய்த் தொற்று மற்றும் உயிரிழப்பு வெகமாக உயர்ந்துள்ளது. இதனால் அங்கு சுகாதார சேவை நிலைகுலையும் அச்சம் உருவாகியுள்ளது.

அங்கு முடக்க நிலை இல்லாதபோதும் சில மாகாணங்களில் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டு முகக்கவசம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நாட்டின் எல்லைகளும் மூடப்பட்டுள்ளன.

இலங்கையிலும் ஏப்ரல் நடுப்பகுதியில் திடீரென நோய் தொற்று எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக இந்திய வைரஸ் திரிபே அண்டை நாடுகளில் நோய்த் தொற்று அதிகரிக்கக் காரணம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

குறிப்பாக இந்தியாவில் வேகமாகப் பரவிவரும் புதுவகை கொரோனா தொற்று, தடுப்பூசியால் கிடைக்கும் பாதுகாப்பை மீறிப் பரவி வரக்கூடும் என உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌம்யா சுவாமிநாதன் கூறியுள்ளார்.



# கிழக்கின் குரல்

# கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலையில் மூன்றாவது கொரோனா சிகிச்சை நிலையம்

## கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் திறந்துவைப்பு

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் மூன்றாவது கொரோனா இடைநிலை சிகிச்சை நிலையம் கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலையில், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ. ஆர். எம்.தௌபீக்கினால் சனிக்கிழமை (08) திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் ஈச்சிலம்பற்று பிரதேச வைத்தியசாலை, குச்சவெளி பிரதேச வைத்தியசாலை, கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலை ஆகிய மூன்று வைத்தியசாலைகளும் கொரோனா இடைநிலை சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்ட நிலையில், குச்சவெளி கொரோனா இடைநிலை சிகிச்சை நிலையத்தில் பெண்கள் மாத்திரம் சிகிச்சை பெற்று வருவதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இதன்போது தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த காலத்தில் தொற்றாளர்கள் வேறு மாவட்டங்களுக்கு சிகிச்சைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டதாகவும், இனிவரும் காலங்களில் திருகோணமலை மாவட்டத்துக்குள் தொற்றாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



திருகோணமலை மாவட்டத்தில் ஒரு மாத காலத்திற்குள் 936 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் மத்திய சுகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைவாக நோயாளர்களின் கட்டில்களை அதிகரித்துள்ளதாகவும், அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வின் போது மத்திய சுகாதார அமைச்சின் பிரதிநிதிகள், திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி.ஜீ.எம். கொஸ்தா, பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வீ.பிரேமானந், கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலை வைத்திய பொறுப்பதிகாரி சோபா சுரேனி கும்புரேகம மற்றும் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டு.மாவட்டத்தில் இடம்பெற்ற விசேட யாக பூசை நிகழ்வுகள்



(கல்லடி குறூப், கல்குடா தினகரன் ,பெரியபோரதீவு தினகரன் நிருபர்கள்)

தற்போது உலகை உலுக்கிவரும் கொவிட் 19 தொற்றுப் பரம்பல் நீங்கி சுபீட்சமானதொரு வாழ்வு மலர உலக மக்களின் நன்மையும் இலங்கை வாழ் மக்களின் நன்மைக்காகவும் வேண்டி சர்வ மதப் பிரார்த்தனைகள் நாடு பூராகவும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 5.46 மணிக்கு இடம் பெற்றது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் எண்ணத்தில் உதித்த சிந்தனைக்கு அமைவாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடாக நாடு பூராகவுமுள்ள சர்வமத ஸ்தலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டமைக்கு அமைவாகவே இவ் விசேட பிரார்த்தனைகள் இடம் பெற்றன.

இதன் பிரகாரம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கையில் உள்ள அனைத்து இந்து ஆலயங்களிலும் விசேட மஹாம்ருத்யுஞ்ஜய யாக வழிபாட்டினை ஆலய அறங்காவலர் மற்றும் கிரியைகளை நிறைவேற்றும் சிவாசாரியார்களோடு மட்டுப்படுத்தி, பிரார்த்தனையை நிறைவேற்றுமாறு பணித்துள்ளமைக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பிரதான விசேட யாக பூசை இன்று கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்றது.



களுவாஞ்சிக்குடி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில்...



வாழைச்சேனை முத்துமாரியம்மன் ஆலயத்தில்...

# நிந்தவூரில் ஒன்றுகூடலில் கலந்துகொண்டவர்கள் மீது அன்டிஜன்

அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணனின் பணிப்புரைக்கு அமைய நிந்தவூர் சுகாதார வைத்திய அலுவலக அதிகாரி வைத்தியர் பறூசா நக்பரின் வழிகாட்டலில், கடந்த வெள்ளிக்கிழமை கொவிட்19 பற்றிய விழிப்புணர்வு ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு செய்யப்பட்டு கொண்டிருந்த வேளையில், பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இந்த முற்றுகை மேற்கொள்ளப்பட்டது.



இம்முற்றுகையானது நிந்தவூர் தியேட்டர் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் சுகாதார வைத்திய அதிகாரியின் அனுமதியில்லாமல் ஒன்றுகூடலில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், அன்டிஜன் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு பிரதான பாதையில் முகக்கவசம் அணியாமல் பயணித்தவர்கள், அங்காடி தெரு வியாபாரிகள், வீதியோரம் முகக்கவசம் அணியாமல் ஒன்று கூடி நின்றவர்களுக்கும் அண்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், உரிய சுகாதார வழிமுறைகளை பின்பற்றாதோருக்கு எதிராக எச்சரிக்கையுடன் கூடிய சட்ட முன்னெடுப்பும் மேற்கொள்ளப்பட்டது.

# சம்மாந்துறையில் இடம்பெற்ற விசேட துஆ பிரார்த்தனை நிகழ்வு

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் எண்ணக்கருவிற்கு அமைவாக இலங்கையில் கொரோனா நோய்த் தொற்றிலிருந்து நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டியும் உலகிலிருந்து கொரோனா நோய்த் தொற்றை இல்லா தொழிக்க வேண்டியும் சனிக்கிழமை (8) மாலை நாடு பூராகவும் சர்வமத வழிபாடுகள் இடம்பெற்றன.



இதற்கமைவாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சம்மாந்துறை மஸ்ஜிதுல் நகர் பள்ளிவாசலில் சூரத்துல் பாத்திஹா ஓதுதல், யாஸீன் ஓதுதல், விசேட துஆ பிரார்த்தனை என்பன சம்மாந்துறை மஸ்ஜிதுல் நகர் பள்ளிவாசல் தலைவர் எம்.எல்.தாசீம் தலைமையில் நடைபெற்றது.

இவ்விஷேட துஆ பிராத்தனையினை சம்மாந்துறை மஸ்ஜிதுல் நகர் பள்ளிவாசலின் பிரதம இமாம் மௌலவி எம்.ஏ.எம்.ஜாபிர் நிகழ்த்தினார்.தற்போது உலகை உலுக்கிவரும் கொவிட் 19 தொற்றுப் பரம்பல் நீங்கி சுபீட்சமானதொரு வாழ்வு மலர உலக மக்களின் நன்மையும் இலங்கை வாழ் மக்களின் நன்மைக்காகவும் வேண்டி சர்வமதப் பிரார்த்தனைகள், மாவட்டத்திலுள்ள பிரசித்திவாய்ந்த பௌத்த, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மதஸ்தலங்களிலும் விசேட ஆராதனைகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**பாறுக் ஷிஹான்**

# பொறியியல் துறைக்கு தெரிவு

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

வெளியாகிய க.பொ.த.உயர்தரப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் பாலமுனை மின்ஹாஜ் மகாவித்தியாலய மாணவன் அப்துல் ஹக்கீம் சபார் அக்தாப் கணிதப்பிரிவில் 3ஏ சித்தியினை பெற்று பாடசாலைக்கும் தனது ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளதுடன், மாவட்ட ரீதியில் 02ஆம் நிலையினை பெற்று பொறியியல் துறைக்கு தெரிவாகியுள்ளார். பாலமுனை இளைஞர் தொண்டர் அமைப்பின் தலைவரும் டீ.லிங் நிறுவன முகாமைத்துவ பணிப்பாளருமான ஏ.எல். எம்.றனீஸ் தலைமையில் குறித்த மாணவனது வீடு சென்று பாராட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

மாணவனின் முன்னேற்றத்துக்கு பாடுபட்ட பாலமுனை மின்ஹாஜ் மகாவித்தியாலய அதிபர் கே.எல்.உபைதுல்லா மற்றும் கற்பித்த ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினருக்கும் பெற்றோருக்கும் தமது அமைப்பு சார்பாக நன்றியையும் பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதாக அமைப்பின் தலைவர் இதன் போது தெரிவித்தார்.

# ஜின்னா நகர் மாணவி சாதனை

தோப்பூர் குறூப் நிருபர்

வெளியாகிய க.பொ.த உயர்தர பெறுபேற்றின் படி தோப்பூர் ஜின்னா நகர் அல்தாஜ் மகா வித்தியாலயத்திலிருந்து முஹம்மட் றியாஸ் சமீஹா எனும் மாணவி கலைப்பிரிவில் 3A பெறுபேற்றுடன் மாவட்டத்தில் 33 ஆம் நிலையைப் பெற்று பல்கலை கழகத்திற்கு தெரிவாகி பாடசாலைக்கும், ஊருக்கும், பெற்றோருக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளதாக பாடசாலை முதல்வர் ஏ.எல். கலிலுர் றஹ்மான் தெரிவித்தார்.

இப்பாடசாலையிலிருந்து க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு கடந்த வருடமே மாணவர்கள் முதல் முதல் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அடிப்படை வசதிகளற்ற இப்பாடசாலையிலிருந்து இம்மாணவி பல்கலை கழகம் தெரிவாகியமை பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

# சுகாதார அமைச்சின் அறிவுரைகளை பின்பற்றி செயற்பட வேண்டும்

## அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி

(ஒலுவில் விசேட நிருபர்)

கொவிட்19 தொற்றை தடுப்பது தொடர்பாக சுகாதார அமைச்சு மற்றும் கலாசார திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி செயற்பட வேண்டுமென, அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். அகிலன் தெரிவித்தார்.



ஒலுவில் பிரதேசத்தில் கொரோனா தடுப்பு சம்மந்தமான விழிப்புணர்வு வழிகாட்டல் கருத்தரங்கு சனிக்கிழமை (08) ஒலுவில் பெரிய ஜும்ஆ பள்ளிவாயல் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கடந்த மூன்று வாரங்களாக நாட்டில் அதிகரித்து வரும் கொரோனா தொற்றை கட்டுப்படுத்தும் முகமாக அரசாங்கம் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இதற்கு பொதுமக்கள் வழங்கும் ஒத்துழைப்பினால் மாத்திரமே இத்தொற்று நோயை கட்டுப்படுத்த முடியும். தற்போது கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலையினால் ஆரோக்கியமான இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதிலிருந்து எம்மை பாதுகாப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். மத தலைவர்கள் கொவிட்19 தொற்று தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

முகக்கவசம் இன்றி சுகாதார நடைமுறைகளை பின்பற்றாது வீதிகளில் தேவையற்ற விதத்தில் நடமாடுவோர், சட்டவிரோதமாக ஒன்று கூடுதல் மற்றும் கூட்டங்களை கூட்டுபவர்கள் கைது செய்யப்படுவர்.

சுகாதார நடைமுறைகளைப் பேணி நடந்து கொள்ளல், கட்டாயமாக பள்ளிவாசலுக்கு வருகை தருவோர் முகக் கவசம் அணிந்து வருவதுடன், தொழுகைக்கான விரிப்புக்களை கொண்டு வருவதோடு, அயல் மாவட்டத்தில் தொடர்புள்ளவர்கள் கிராமத்திற்கு வருகின்ற போது முடிந்தவரை வீடுகளில் தங்கி இருத்தல்.

சுகாதார நடைமுறையினை பின்பற்ற தவறும் போது, குறித்த பள்ளிவாசல் நிருவாகம் பள்ளியின் இயக்கப்பாடு பற்றி தீர்மானித்தல், கலாசார திணைக்களத்தின் மூலம் அறிவுறுத்தப் பட்ட கொரோனா பாதுகாப்புக் குழுவினை அமைத்தல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# உர வகை, கிருமி நாசினிகளின் விலையில் திடீர் அதிகரிப்பு; விவசாயிகள் பாதிப்பு

மணல்சேனை நிருபர்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உரம் மற்றும் கிருமி நாசினிகளின் விலை திடீரென அதிகரித்து இருப்பதனால், தாங்கள் இதனை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் கஷ்டப்படுவதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். குறிப்பாக அண்மைக்காலமாக விவசாயச் செய்கைக்குப் பயன்படுத்தும் யூரியா வகை உரம் மற்றும் களைநாசினி, கிருமிநாசினிகள் ஆரம்பத்தில் விற்பனை செய்யப்பட்டதனை விட இரட்டிப்பான தொகையில் கடைகளில் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

அதாவது களைக்குப் பயன்படுத்தப்படும் ரெட்ரீஸ் எனப்படும் களைநாசினி கடந்த வாரம் 2500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது, அது தற்போது 4900 ரூபாவிற்கு கடைகளில் விற்பனையாகுவதாகவும், யூரியா உரம் 1000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது தற்போது 2500 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர். இவ்வாறு திடீரென உரம், களைநாசினி மற்றும் கிருமி நாசினிகளினது விலை அதிகரிக்கப்பட்டமையால் கடன் பட்டு விவசாயத்தினை மேற்கொள்ளும் விவசாயிகள் பெரும் நஷ்டத்தினை எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்படக் கூடும் என குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு உரம், கிருமிநாசினி மற்றும் களைநாசினிகளின் விலைகளை அதிகரிப்பினை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



(படம்; காரைதீவு குறூப் நிருபர்)

கொவிட் 19 தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு அம்பாளின் நல்லாசி வேண்டி காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில், ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்ற விசேட பூஜையின்போது.

# கிராஞ்சி கடற்றொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் அவதானம்

(கரவெட்டி தினகரன் நிருபர்)

கடற்றொழில் செயற்பாடுகளை பாதிக்கும் வகையில் கடற்றொழிலாளர்கள் மத்தியில் ஏற்படும் முரண்பாடுகள் பக்கச்சார்பற்ற முறையில் நீதியாக தீர்த்து வைக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி, கிராஞ்சி கடற்றொழிலாளர் சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் (08.05.2021) நடைபெற்ற கலந்துரையாடலின்போதே









கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிராஞ்சி கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் பிரதேச மக்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பான குறித்த கலந்துரையாடலில், கிராஞ்சிக் கிராமத்தில் அமைந்துள்ள இறங்குதுறைகளுக்கு மின்சார இணைப்புக்களை ஏற்படுத்தல், இறங்கு துறைகளை ஆழப்படுத்துதல் மற்றும் பிரதான வீதியில் இருந்து கிராஞ்சி கிராமத்திற்கான வீதியை புனரமைத்தல் போன்ற கோரிக்கைகள் பிரதேச மக்களினால் கடற்றொழில் அமைச்சரிடம் முனவைக்கப்பட்டன.

குறித்த விடயங்கள் தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடிய கடற்றொழில் அமைச்சர், தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

மேலும், கிராஞ்சி கடல் பிரதேசத்தில் சிறுதொழிலில் ஈடுபடுகின்ற பிரதேசத்தில் சிலரினால் கடலட்டை பண்ணை அமைக்கப்பட்ட விவகாரத்தினை நியாயமான முறையில் தீர்த்து வைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புதிதாக கடலட்டை பண்ணைகளை அமைப்பதற்கு விருப்பம் தெரிவித்தவர்கள் தொடர்பாகவும் அவதானம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நம்ப வைத்து ஏமாற்றியது கூட்டமைப்பு; வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் ஒன்றியம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் பதவியை ஒரு வருடத்திற்கு தமது அமைப்பிற்கு தருவதாக தெரிவித்து தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏமாற்றியுள்ளதாக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ் ஒன்றியத்தின் நிர்வாக செயலாளர் சி. ஜனார்த்தனன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

2018ம் ஆண்டு இடம்பெற்ற பிரதேசசபை தேர்தலில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு மாத்திரம் மலையக மக்கள் சார்பாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் ஒன்றியத்தின் சார்பில் தனித்து சுயேட்சையாக நாங்கள் போட்டியிட்டிருந்தோம். இதன் மூலம் எமது மக்கள் இரண்டு பிரதிநிதிகளை வழங்கியிருந்தனர். அவ்வாசனங்களின் ஆதரவின் மூலமே தமிழ் தேசிய கூட்டமைப்பு வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையில் ஆட்சி அமைப்பதற்கு ஊன்றுகோலாக இருந்தது. இது தொடர்பில் நாம் கூட்டமைப்புடன் ஒப்பந்தத்தினையும் மேற்கொண்டிருந்தோம்.

இந்த ஒப்பந்தமானது தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளான தமிழரசுகட்சி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம், தமிழ் ஈழ மக்கள் விடுதலைக்கழகம் ஆகியவற்றின் சார்பிலே கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசசபையின் தவிசாளர் பதவியானது, முதல் மூன்று வருடமும் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் இறுதி ஒரு வருடம் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒன்றியத்திற்கு வழங்கப்பட வேண்டும் என்று இவ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை ரெலோ சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் சார்பாக சந்திரகுலசிங்கம், தமிழரசுகட்சி சார்பாக வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கமும் மற்றும் எமது அமைப்பு சார்பாக அமைப்பின் தலைவர் எம்.பி.நடராஜாவும் கையொப்பமிட்டுள்ளனர்.

ஆனால் தற்பொழுது மூன்று வருடம் முடிவடைந்த பின்பும் இவ் ஒப்பந்தத்தை மீறி தமிழ் தேசிய கூட்டமைப்பு தங்களுக்குள்ளாகவே தவிசாளரை நியமித்துள்ளனர். இதன் மூலமாக இவர்கள் எங்களை ஏமாற்றியுள்ளனர். இவ்வாறு ஒரு பிரதேசசபை தவிசாளர் பதவி ஒன்றிற்காகவே இவ்வாறு ஏமாற்று வேலையை செய்யும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தேசியத்திற்காக இவர்கள் எவ்வாறு அனைவரையும் ஒன்றிணைத்து செயற்படுத்த போகிறார்கள்.

அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைத்து செயற்பட வேண்டிய பொறுப்பு தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் உள்ளது.

## கார்த்திகேசு சர்மா சந்திரசேகர சர்மாவின் சிவப்பிராப்திக்கு இறை பிரார்த்தனை

இந்து குருமார் அமைப்பு



கீரிமலையை பிறப்பிடமாவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஶ்ரீ கார்த்திகேசு சர்மா சந்திரசேகர சர்மாவின் சிவப்பிராப்திக்கு இறை பிரார்த்தனை செய்வதாக இந்து குருமார் அமைப்பு தெரிவித்துள்ளது. அது தொடர்பாக அவ்வமைப்பின் தலைவர் கலாநிதி சிவஶ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்.விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இவரது இறைபதச்செய்தி அறிந்து மிகவும் கவலை அடைந்தோம். கடந்த ஏழு வருடங்களாக எமது இந்துக் குருமார் அமைப்பின் செயலாளராக பதவி வகித்து வந்தார். அனைவராலும் கீரிமலை சந்திரண்ணா, கீரிமலை சந்திரன்ஐயா என அறியப்பட்டவர். அழைக்கப்பட்டவர்.

எமது இந்துக் குருமார் அமைப்பின் சமய சமூகம் சார்ந்த பணிகளுக்கு முன்னுரிமை அளித்து செயல்பட்டதுடன் எம் அனைவருக்கும் உற்சாகம் தரும் வண்ணம் முன்னுதாரணமாக செயல்பட்டவர். சிறப்பாக மாணவர்களின் கல்விக்கு இயன்றளவில் உதவியுடன் ஊக்குவிக்கும் வழங்கும் செயல்பாடுகளில் ஈடுபட்டு வந்தார்.

யாழ்ப்பாணம் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் மூத்த உறுப்பினராகவும் செயலாளராகவும் இருந்து பல ஆக்கபூர்வமான பணிகளை புரிந்துள்ளார். தொடந்தும் நாம் அனைவரும் அவருடைய நற்பணிகளை முன்னெடுப்போம்.

அவரது தீடீர் இறைபத செய்தி மிகவும் கவலையை தந்துள்ளது. அமரரது ஆத்ம சிவப்பிராப்திக்கு அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்கின்றோம். அத்துடன்உறவுகளுடன்எமது ஆறுதலை பகிர்ந்து கொள்கிறோம்.

## அச்சுவேலி பிரதான பொதுச்சந்தை கட்டடத் திறப்பு விழா இன்று

(யாழ்.விசேட நிருபர்)

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையினால் அச்சுவேலி பொதுச் சந்தையில் புதிதாக அமைக்கப்பட்ட பிரதான பொதுச்சந்தைக் கட்டடம் இன்று திங்கட்கிழமை (10) காலை 10 மணிக்கு இணைய நேரலையில் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்படவுள்ளது. இதனை பிரதேச சபையின் தவிசாளார் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

